பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | பங்குனி 04 | புதன்கிழமை | (17-03-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 89

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# ஆட்சியமைக்கும் கட்சியுடன் இணையவேண்டும்

# மட்டு-அம்பாறை வேட்பாளர்களுக்கு

# கருணா அணியினர் புதிய அறிவுறுத்தல்!

## வேட்பாளர்கள் சிலர் விரைவில் வன்னி வருவர்

(நமது நிருபர்)

**மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் சிலர் விரைவில் வன்னி சென்று தங்களுடைய எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக ஆராயவுள்ளதாக மட்டு-அம்பாறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

தமிழீழ விடுதலைப் புலிகளின் வன்னித் தலைமைக்கும் மட்டு. அம்பாறை முன்னாள் சிறப்புத் தளபதி கேணல் கருணாவுக்கும் இடையிலான நெருக்கடிநிலையை அடுத்து கருணா புலிகளின் தலைமையினால் அவ் அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்டிருந்தார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் கருணா வெளியேற்றப்பட்டதை அடுத்து மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் தமிழ்த தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தேர்தல்களத்தில் குதித்துள்ள வேட்பாளர்கள் இரட்டைத் தலைமைக்குள் சிக்கிப் பதில்கூறவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து கருணா அணியினர் மட்டக்களப்பு மாவட்டத்திலும், அம்பாறை மாவட்டத்திலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களை அழைத்து தேர்தல் பிரசார நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்ளவேண்டும் என்ற அறிவுறுத்தல்களை வழங்கிய போதிலும், வன்னித் தலைமைகு விசுவாசமுள்ள வேடபாளர்கள் அதற்கு இணக்கம் தெரிவிக்காத நிலையில், புலிகளின் தலைமையில் ஆலோசனைகளைப் பெறுவதற்காக விரைவில் வன்னி செல்லவுள்ளனர் என்று வேட்பாளர்களை மேற்கோள்காட்டி கிழக்குச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கிழக்கின் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டே

(12ஆம் பக்கம் பார்க்க)

## வாக்களிப்பு நிலையம் குறித்து வெள்ளியன்று மீண்டும் சந்திப்பு

(கொழும்பு)

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் உள்ள வாக்காளர்கள் தேர்தலில் வாக்களிப்பதற்குரிய வாக்களிப்பு நிலையங்களை சூனியப் பிரதேசத்தில் அமைப்பது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க மீண்டும் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை இராணுவ உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தவுள்ளார்.

இது விடயம் தொடர்பாக நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் ஆணையாளர்-இராணுவ உயர் அதிகாரிகளுக்கிடையிலான பேச்சுவார்த்தைகளில் இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. இந்நிலையிலேயே நாளைமறுதினம் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தாய், பிள்ளைகளை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேரை காணவில்லையென யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குருநகரைச் சேர்ந்த கியூபேட் மேரி மெக்டலின் (வயது-39), அவரது பிள்ளைகளான நிரோசா (வயது-15), நிரோசன் (வயது-12), அழகு (வயது-9), யூட் நியூட்டன் (வயது-7) ஆகியோரே காணாமல்போயுள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## அபிவிருத்தி லொத்தர் சபைச் சீட்டிழுப்பில் யாழ். வாசிக்கு ரூபா. 10 லட்சம் அதிர்ஷ்டம்

(யாழ்ப்பாணம்)

அபிவிருத்தி லொத்தர் சபையின் 'ஜயோத' அதிர்ஷ்டலாபச் சட்டிழுப்பில் யாழ்ப்பாணவாசி ஒருவர் 10 இலட்சம் ரூபா பரிசுக்கு அதிர்ஷ்டசாலியாகியுள்ளார்.

அபிவிருத்தி லொத்தர்சபையின் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு நேற்று கொழும்பில் நடைபெற்றது. இதில் 523328 என்ற இலக்கத்தை கொண்ட நபருக்கே 10 இலட்சம் ரூபா அதிர்ஷ்டமாகக் கிடைத்துள்ளது.

பத்து இலட்சம் ரூபா பரிசுக்குரிய மேற்படி இலக்கத்தையுடைய அதிர்ஷ்ட சாலியை இலக்கம் 55, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள அபிவிருத்தி லொத்தர் சபையின் யாழ்ப்பாண மாவட்ட முகவர் சோ.மகேந்திரலிங்கத்துடன் அல்லது இலக்கம் 33, செண். மைக்கல்வீதி, கொழும்பு -3 என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ச-121)

## தேரர்கள் அரசியலில் ஈடுபட மகாநாயக்கர்கள் ஆதரவு

(கொழும்பு)

பௌத்தமத குருமார் அரசியலில் ஈடுபடுவதைத் தாம் ஆதரிப்பதாக மல்வத்தை மற்றும் அஸ்கிரிய மகாநாயக்கர்கள் அறிவித்துள்ளனர்.

ஹெல உறுமயக் கட்சியின் செயலாளர் உடுகம தம்மாலோக தேரர், மகாநாயக்கர்களை நேற்றுச் சந்தித்துப் பேசினார்.

சிங்கள சமூகத்தையும், பௌத்த சமூகத்தையும் பாதுகாக்கும் நோக்கிலேயே தாம் தேர்தலில் போட்டியிடப்போவதாக ஹெல உறுமயக் கட்சியின் செயலாளர் மகாநாயக்கரிடம் உறுதியளித்தார். இதன் பொருட்டே பௌத்தமத குருமார்கள் அரசியலில் ஈடுபட அனுமதியும் ஆசியும் அளிப்பதாக மகாநாயக்க தேரர்கள் தெரிவித்துள்ளனர்.

பௌத்த பிக்குகள் நேரடியாக அரசியலில் ஈடுபடுவதை வேறு இரு பௌத்த மகாநாயக்கர்கள் ஆட்சேபித்துக் கருத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ச)

## ஹக்கீமின் கூட்டத்தை பகிஷ்கரித்து ஹர்த்தால்

(அம்பாறை)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் நேற்றைய தினம் மாலை அக்கரைப்பற்றில் நடைபெறவிருந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தைப் பகிஷ்கரித்து நேற்று முழுநாளும் அக்கரைப்பற்றில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மீது மக்கள் கொண்டுள்ள அதிருப்தியின் எதிரொலிப்பாகவே அங்கு பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

இதனால், அப்பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் அரச சார் பற்ற நிறுவனங்கள் எனப் பலவும் மூடப்பட்டிருந்ததுடன், நகரின் வழமையான செயற்பாடுகள் யாவும் ஸ்தம்பிதமடைந்திருந்தன. (தி-18)



திரு.வீ.ஆனந்தசங்கரி

(முன்னாள் பா.உ. யாழ்ப்பாணம்)

இல. 4

தமிழினத்தின் விடியலுக்கான தீர்வு
சுயநிர்ணய உரிமையுடனான
சுதந்திர வாழ்வு.....

வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான

சுயேச்சைக்குழு – 01



பெ.சூரியமூர்த்தி

(மாராம்பலம்-வடமராட்சி முன்னாள் நகரபிதா, திருகோணமலை)

இல. 8

(சி-7437)



நாடாளுமன்ற பொதுத் தேர்தல்–2004

சொந்த் மண்ணில் சுகவாழ்வு காணும்
துணிவை ஊட்டியது யார்?
போரில் சிதைந்த தாயகத்தை கட்டியெழுப்ப
ஊக்கம் கொடுத்தது யார்?

சிந்தித்துப் பார்த்து வாக்களியுங்கள்!
வீணையே உங்கள் தெரிவாகட்டும்!!



X

(சி-7439)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

## சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

யாழ் இந்து உயர் வேளாள குடும்பத்தைச் சேர்ந்த 32 வயதுடைய அத்த நட்சத்திரம் செவ்வாய் குற்றமற்ற, கிரகபாவம் 9 உடைய 6 அடி உயரமுள்ள நோர்வேயில் ARCHITECT கல்லூரியில் COMPUTER CONSULTANT ஆகக் கடமைபுரியும் நிரந்தர பிரஜா உரிமை உள்ள மணமகனுக்கு, மெல்லிய, படித்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். குடும்ப விபரம், ஜாதகக் குறிப்புடன் தொடர் இல- மே/பா வலம்புரி விளம்பர இல.450, 15,வெள்ளாந்தெரு வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (8446)

யாழ். இந்து வேளாளர், U.Kயில் குடியுரிமை பெற்ற, 34 வயது, நட்சத்திரம் பரணி, 1ம் பாதம், மேடராசி, உயரம் 6 அடி, வெள்ளை நிறம், கல்வித்தகுதி B.S.C. கம்பியூட் டர் எஞ்சினியர், நல்ல குடும்ப பின்னணியில் உள்ள மணமகனுக்கு பட்டப்படிப்பு முடித்த அழகான மணமகள் தேவை. மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு இந்து, கிறிஸ்தவ மணமக்கள் தேவைக்கு உடன் தொடர்பு கொள்ளவும். சிவாலயா சர்வதேச திருமண நிலையம், ஸ்ரீ வைகுந்த ஆச்சிரமம், 68/15, சட்டநாதர் வீதி, (சமுர்த்திவங்கி அருகில்), நல்லூர், யாழ்ப்பாணம். (8449)

# அறவழி சமாதான அமைப்பு யாழ். குடாநாட்டுக்கு விஜயம்

## இங்குள்ள நிலைமைகள் குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு நிலைமைகளைப் பார்வையிடும் பொருட்டு அறவழி சமாதான அமைப்பைச் சேர்ந்த பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர்.

நேற்று யாழ். வந்த அறவழி சமாதான அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளரான மெல்டங்கன் இவ் அமைப்பின் ஆய்வுகளுக்கான பணிப்பாளர் கிறிஸ்ரின் ஈவிட்சர் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர் சாள்ஸ் ஒரினா ஆகியோர் யாழ். மாவட்ட அரசசார்பற்ற இணையப்பிரதிநிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இணையத் தலைவர் எம்.சிறீ சக்திவேல் தலைமையில் இடம் பெற்ற இச்சந்திப்பின்போது, அரசு-புலிகளுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பின்னர் யாழ். குடாநாட்டு மக்கள் வாழ்வில் ஏற்பட்ட முன்னேற்றம், இயல்பு வாழ்வு மற்றும் மீள்குடியேற்றம் சம்பந்தமான பிரச்சினைகள் தொடர்பாகவும் பிரஸ்தாபிக்கப்பட்டன.

இதன்போது புரிந்துணர்வு ஒப்பந்தம் உருவாகி 2 வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் மக்களுக்கு இயல்பு வாழ்வு திரும்பவில்லை. பல்லாயிரக்கணக்கானோர் அகதி வாழ்க்கையையே இன்னமும் தொடர்கின்றனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது. (தி-3)

# சமூகமுன்னேற்றக் கழகத்தில் பரிசில் பெறுவோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் 22வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி சமூக முன்னேற்றக்கழக கழகங்களின் சமாசமும்,புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியமும் நடத்தும் பரிசளிப்பு விழா எதிர்வரும் 29ம் திகதி மு.ப.9மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் 1998, 1999, 2000, 2001, 2002ம் ஆண்டுகளில் நடைபெற்ற க.பொ.த. சாதாரணப் பரீட்சை மற்றும் ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

அதற்கமைய க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்திபெற்று பரிசில்களைப் பெறத்தகுதியான மாணவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு:

சி.சங்கீதா-நல்லூர், ப.ஜெகதப்பன்-நீர்வேலி,ம.ஷோபிதா-உரும்பிராய்,சி. சங்கர்-மானிப்பாய், சோ. சுதர்சன்-மானிப்பாய் ,ந.பிந்துஷா-நல்லூர்,இ.யசோதரன்-மிருசுவில், சி.றூபிகா-சங்கானை, சோ. கவியரசி-சங்கானை, செ.அனித்தா-கோண்டாவில் கிழக்கு,த.சுதர்சினி-மானிப்பாய்,ச.அசோக்-உரும்பிராய்,செ.மரியதாஸ்-யாழ்ப்பாணம், செ.கஸ்தூரி-கோண்டாவில்,சி. றஜீவ்-மானிப்பாய்,சி. சஜீகா-சங்கானை, த.வேனிசா-இளவாலை, ம.கனிசானந்-மானிப்பாய்,

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து பரிசில்களைப்பெறும் மாணவர்களின் பெயர்விபரம் வருமாறு:

சு.வினோத்-நல்லூர், மை.டினோஷன்-யாழ்ப்பாணம், பொ.றினோசா-கொடிகாமம், ப.ஜெனனன்-கட்டப்பிராய், பி.சகிறா அனற்-யாழ்ப்பாணம், கா.மேரிஅல் பெற்றா-நவாலி தெற்கு,த.சுகன்யா-மல்லாகம், வி. நிதர்சன்-சங்கானை, ந.சாகினி-இளவாலை, ஜோ. சாளினி- கொடிகாமம், மு.மதிவதனி-யாழ்ப்பாணம்,அ.காயத்திரி-பருத்தித்துறை, மோ. விஜிந்தினி-கரவெட்டி, ப.தீபா-நீர்வேலி,

தெ.றொஷானி-அரியாலை ,ஜெ.றோஜி-மீசாலை,பா.கஜந்தன்-அரியாலை,அன்ரன்நிரோஜ்-யாழ்ப்பாணம், சி.தமிழ்ச்செல்வி-புலோலி தெற்கு, தி.திலிபன்-வல்வெட்டித்துறை.

ஜெ.அகிம்மா-கரவெட்டி, தே. ரெனோ-யாழ்ப்பாணம், பெ. ஜெனோத்-கொடிகாமம், லோ. நிஷாந்-நல்லூர்,ஆ.சுஜீவன்-மல்லாகம், ம.அனுசியா-உடுவில், இ.தர்மிகா-சங்கத்தானை, க.திபானுகா-கிளிநொச்சி, ச.பிரியா-உரும்பிராய்,ம.தர்ஷா-உரும்பிராய். (தி-10)

## இன்று தியான வழிபாடு

(கொழும்புத்துறை)

இறைதியானக் குழுவினரின் வழிபாடுகள் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு கொழும்புத்துறை புனித செபமாலை மாதா ஆலயத்திலும் மாலை 4.00 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்திலும் இடம்பெறவுள்ளன. (த-51)

# காரைநகர் கடைகளில் மதுபான விற்பனை

(காரைநகர்)

காரைநகரிலுள்ள கடைகளில் மதுபானம் விற்போர் விற்பனையில் மாற்று வழிகளைக் கையாண்டு வருகின்றனர்.

காரைநகரின் பல பகுதிகளிலும் உள்ள கடைகளிலும் உணவுச்சாலைகளிலும் மதுபானம் விற்பனை செய்யப்பட்டு வந்தது. ஆனால் கடந்த சில வாரத்திற்கு முன்னர் காரைநகரில் பொலிஸ் நிலையம் திறக்கப்பட்டதையடுத்து பொலிஸாரின் அதிகளவு நடமாட்டம் காரணமாக மதுவிற்பனை குறைவடைந்திருந்தது.

ஆனால் தற்போது கடைகளில் அன்றி நடமாடும் விற்பனையைப் போல் கார்களிலும் சைக்கிள்களிலும் வீதியோரங்களிலும் வைத்து மதுபானம் விற்பனை செய்யப்பட்டு வருவதாக பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.இதனால் போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகின்றது. (தி-246)

## ஹொக்கி போட்டி வீரர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக விளையாட்டு அவையினர் யாழ். மாவட்ட ரீதியாக ஏழுபேர் கொண்ட ஹொக்கி சுற்றுப்போட்டி ஒன்றினை நடாத்தவுள்ளனர். இப்போட்டியில் பங்கு பற்றவிரும்பும் அணியினர் பல்கலைக் கழக உடற்கல்வி அலகில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து அதனை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைக்கு முன்னதாகச் சமர்ப்பிக்குமாறு உடற்கல்வி அலகின் இணைப்பாளர் கேட்டுள்ளார். (த)





நேற்று யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொண்டிருந்த அறவழி சமாதான அமைப்பின் பிரதிநிதிகள் அரச சார்பற்ற இணையப் பிரதிநிதிகளை சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தப்பட்ட போது எடுக்கப்பட்ட படம்.



அரச மருத்துவர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்தினால் வெறிச்சோடிக் காணப்படும் யாழ். போதனா வைத்தியசாலையின் வெளி நோயாளர் சிகிச்சைப் பிரிவு. (படங்கள்-சாந்தன்)

# தேர்தல் பணியில் தொண்டர் நிறுவனம் கலைஞர் கருணாநிதி குற்றச் சாட்டு

(சென்னை)

மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண்களைத் தேர்தல் வேலைகளுக்கும் பிரசாரத்துக்கும அ.இ.அ.தி.மு.க. பயன்படுத்துவதாக தி.மு.க. தலைவர் கருணாநிதி குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

சென்னையில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் அ.இ.அ.தி.மு.கவுக்கு ஆதரவு தருவோருக்கு கடன்கள்,சேவைகள் போன்ற இலவச உதவிகளை வழங்குவதில் பன்னாட்டுத்தொண்டு நிறுவனங்களைப் பயன்படுத்த தமிழ் நாடு அரசு முயற்சி செய்வதாகவும் இதனைத் தேர்தல் ஆணையம் கவனித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

அரசு ஊழியர்கள்,குறிப்பாகக் காவல் துறையினர் ஆளும் கட்சிக்கு பகிரங்கமாக ஆதரவு தெரிவித்து வருவதாகவும் தலைமைக் காவலர் ஒருவர் அ.தி.மு.க. வெற்றிக்காக கைவிரல்களை வெட்டிக் கொண்டது இதற்குச் சான்று என்றும் கருணாநிதி கூறியிருக்கிறார்.

அ.தி.மு.கவின் தேர்தல் அறிக்கை கடந்த 6 ஆம் திகதி வெளியிடப் பட்டும் அது இன்னமும் தேர்தல் ஆணையத்துக்குக் கிடைக்காதது தகவல் இடைவெளியைக் காட்டுகிறது என்றும் தேர்தல் ஆணையம் இதுவிடயத்தில் நடவடிக்கை எடுக்குமென்றும் நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (து)

## மத்திய துணையமைச்சர் திடீர் இராஜினாமா

(டெல்லி)

மத்திய கப்பல் போக்குவரத்து துணையமைச்சர் திலிப் காந்தி நேற்று முன்தினம் அமைச்சரவையில் இருந்து இராஜினாமாச் செய்துள்ளார்.

மகாராஷ்டிர மாநிலம் அக்மன் தொகுதியில் போட்டியிடத் தமக்கு வாய்ப்பு அளிக்கப்படாததையடுத்து அமைச்சர் பதவியில் இருந்து விலகுவதாகவும் இராஜினாமாக் கடிதத்தை பிரதமரிடம் அளிக்கவிருப்பதாகவும் திலிப் காந்தி செய்தி நிறுவனம் ஒன்றிற்கு அளிக்க பேட்டியில் கூறினார்.(து)

# இந்தியச் செய்திகள்

## தேர்தலில் போட்டியிட கிரிமினல்களுக்குத் தடை

(திருப்பதி)

கிரிமினல் வழக்குகளில் சம்பந்தம் இருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களுக்கு அரசியல் கட்சிகள் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு அளிப்பதைத் தவிர்க்க வேண்டுமென்று தலைமைத் தேர்தல் ஆணையர் கிருஷ்ண மூர்த்தி கேட்டுக்கொண்டிருக்கிறார்.

சிந்தூர் மாவட்டத்தில் தேர்தல் ஏற்பாடுகள் குறித்து ஆய்வு செய்த பின் திருப்பதியில் செய்தியாளர்களுடன் பேசிய அவர் வழக்குகள் விசாரணை நிலையில் இருந்தாலும் இந் நடைமுறையைக் கட்சிகள் பின்பற்றவேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார்.

இதுதொடர்பாக தேவையான விதிமுறைகள் ஏற்கனவே வகுக்கப்பட்டுள்ள போதிலும் கிரிமினல் குற்றவாளிகள் தேர்தலில் போட்டியிடாமல் தடுக்கவேண்டிய பொறுப்பு அரசியல் கட்சிகளிடமே உள்ளது என்றும் கிருஷ்ண மூர்த்தி குறிப்பிட்டார். (து)

## பா.ஜ.கட்சிக்கு அத்வானி புகழாரம்

(புதுடில்லி)

கூட்டணி என்பது தற்காலிகமானது என்று காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி கூறியிருப்பது கூட்டணி பற்றி அக்கட்சியின் அலட்சியத்தையே காட்டுகிறது என்றும் இதனைக் காங்கிரசுடன் கூட்டணி சேர்ந்துள்ள கட்சிகள் உணர வேண்டும் என்றும் துணைப்பிரதமர் எல். கே. அத்வானி கூறியிருக்கிறார்.

செய்தியாளர்களிடம் பேசிய அவர் சோனியா காந்தியின் இந்தக கருத்து காங்கிரஸ் மட்டுமே நாட்டை ஆள்வதற்கான தகுதி படைத்தது என்ற அக்கட்சியின் அகந்தையையே காட்டுகிறது என்றார்.

நாடு விடுதலை அடைந்த பின்னர் அமைந்த ஜவகர்லால்நேருவின் மத்திய அமைச்சரவையில வேறுபட்ட அரசியல் கோட்பாடு கொண்டவர்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது போன்று வாஜ்பாய் அரசும் தேசிய பிரதிநிதித்துவத்துடன் அமைந்துள்ளதாக அவர் கூறினார்.

இன்னும் 14 ஆண்டுகளில் இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக உருவாக்கவேண்டும் என்ற இலட்சியத்துடன் வாஜ்பாய் தலைமையிலான கூட்டணி அரசு செயல்பட்டு வருவதாக அவர்மேலும குறிப்பிட்டார். (து)



# அந்தநாள் நினைவுகள்...

## மக்கள் மனங்களில் மீண்டும் துளிர்விடும் அந்த

## மறக்க முடியாத நினைவுகளில் சில வரிகள்.



அன்று
சொல்ல முடியாத துயரங்கள்
எழுத இயலாத வரிகள்
தடுக்கப்படும் அசுர கைகள்
ஆறுதலளித்தும் ஆலோசனை தந்தும்
வளர்த்து விட்ட பெருந்தலைவர்கள்



அவர்கள் காட்டிய பாதையில் இன்றும் தடம்புரளாத
தலைவனாக
மக்கள் சேவையினை தன் பணியாகக் கொண்ட
தலைவனாக
துணிந்து நின்று இனத்திற்காய் குரல் கொடுக்கும்
தலைவனாக



"நாம் அரசுக்கு தொடர்ந்தும் தொல்லை கொடுப்பவர்களாகவே இருக்க வேண்டும்.
எங்கள் தொல்லையினைத் தாங்க முடியாத அரசு ~ எம்மை தூக்கி வெளியில் வீசி எறியும். அப்போது நாம் எமக்கென ஒரு சுதந்திர நாட்டை உருவாக்க முடியும்"

என்ற தந்தையின் சொல்லை தட்டாத தலைவனாக
ஏழ்மையின் பங்காளியாக, தூய்மையின் உறைவிடமாக, அன்பின் இருப்பிடமாக, பொய்யின் எதிரியாக, கறைபடியாக் கரங்களுடன்



அரசியற் பணியை மக்கள் சேவையாகக் கொண்டு
செயற்படும் இன்றைய தனிப்பெருந்தலைவன்

**வீரசிங்கம் ஆனந்தசங்கரி** (தலைவர்~தமிழர் விடுதலைக் கூட்டணி)

தமிழினம் மீண்டும் பேரழிவில் சிக்காது
சுயநிர்ணய உரிமையுடனான சுதந்திரத் தாயகத்தை
வாழ வேண்டிய குருத்துக்கள், இனியும் கருகிவிடாது
தூய அரசியல் இலக்கினை சென்றடைய
ஒருமித்த குரலில் எம் நிலம் எமக்கே சொந்தமென உரத்துச் சொல்ல

## வாக்களித்து வெல்ல வைப்போம்

# வீ.ஆனந்தசங்கரி (தலைவர்-தமிழர் விடுதலைக் கூட்டணி)

தலைமையிலான

**சுயேச்சைக் குழு : 1**



X 4

தீவக மக்கள் அபிவிருத்தி ஒன்றியம்

அறிவித்தல் :~ எக்காரணம் கொண்டும் எனது தலைமையிலான சுயேச்சைக்குழு ~ 1 இத்தேர்தலில் இருந்து விலகிக் கொள்ள மாட்டார்கள் என்பதனை உறுதியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். தயவு செய்து வீண் வதந்திகளை நம்ப வேண்டாம்.

C/7436

# இன்று ஒரு தகவல்

## நுண்ணறிவு

ஒரு அரசன், சேவகன் இருவரும் குதிரையில் வந்து கொண்டிருந்தனர். நீண்டதூரம் வந்துவிட்டனர். அரசனுக்குத் தாகம் எடுத்தது. தண்ணீர் எங்கே கிடைக்கும் என்று பார்த்தனர். பக்கத்தில் வீடுகள் எதுவுமில்லை. கொஞ்ச தூரத்தில் வேலியில் ஒரு வெள்ளரிப்பழம் தெரிந்தது. அதோ ஒரு வெள்ளரிப்பழம் தெரிகின்றது. அதையாவது பறித்து உண்ணலாம் என்றான் மன்னன். "இதோ பறித்துக் கொண்டு வருகின்றேன்" என்று புறப்பட்டான் சேவகன். "அது வெள்ளரிப்பழம் இல்லை" என்றது ஒரு குரல். "யார் அது?" என்று இருவரும் திரும்பிப் பார்த்தனர். ஒரு பார்வையில்லாத பிச்சைக்காரன் மரத்தடியில் உட்கார்ந்திருந்தான். அவன் தான் அப்படிக் குரல் கொடுத்தது.

அரசன் பார்த்தான் "இவனுக்கோ பார்வை இல்லை. இவனுக்கு எப்படி அது வெள்ளரிப்பழமா இல்லையா என்பது தெரியும். நீபோய் பறித்துக்கொண்டுவா" என்றான். சேவகன் போய் பறித்துக்கொண்டுவந்தான். மன்னன் அதை வாங்கிச் சாப்பிட்டான். வாயில் வைக்கவே முடியவில்லை. ஒரே கசப்பு அவனுக்கு ஆச்சரியம். பிச்சைக்காரனிடம் கேட்டான் "அது எப்படி... இது வெள்ளரிப்பழம் .இல்லையென்ற உண்மை உனக்குத் தெரிந்தது?" என்றான். அவன் சொன்னான் "ஐயா இது நான்கு பேர் வந்து போகும் இடம். அது வெள்ளரிப்பழமாக இருந்திருந்தால் வருவோர் இவ்வளவு காலம் அதை விட்டுவைத்திருக்கமாட்டார்கள். அதனால் தான் அது வெள்ளரிப்பழமாக இருக்க முடியாது" என்று தீர்மானித்தேன்" என்றான்.

அடுத்தபடியாக தண்ணீருக்கு என்ன செய்யலாம் என்று யோசித்தான் மன்னன். "சேவகன் சொன்னான் அரசே நான்கு பக்கமும் தெரு உள்ளது. நான் கிழக்குப் பாதையில் சென்று பார்க்கின்றேன். அங்கு நீர்நிலை இருக்கும்" என்று கூறிக் கிளம்பினான். இப்போதும் பிச்சைக்காரன் கூறினான் "ஐயா கிழக்கே நீரில்லை தெற்குப் பாதையில் நீர் உண்டு" என்றான். அவன் சொன்னது போலவே தெற்குத்திசையில் ஒரு குளம் . "இது எப்படி உனக்குத் தெரியும்?" என்று கேட்டான் மன்னன். "ஐயா எனக்கு உடலில் சட்டை இல்லை. தெற்கிலிருந்து வரும் காற்று குளிர்ச்சியாக இருந்தது. அதனால் அங்கே தண்ணீர் இருக்கும் என்று நினைத்தேன்" என்றான்.

அரசன் பார்த்தான் இப்படிப்பட்ட ஒரு ஆள் அரண்மனையில் எப்போதும் இருந்தால் மிகவும் உபயோகபபடுவான் என்று நினைத்தான். அப்படியே அவனைத் தூக்கிக் குதிரையில் வைத்து அரண்மனைக்குக் கொண்டுபோய் விட்டான். தினமும் ஒரு பொட்டலம் சாம்பார்சாதம் அவனுக்குக் கொடுக்கும்படி உத்தரவிட்டான் அப்படியே நடந்தது.

அந்த அரண்மனைக்கு ஒருநாள் ஒரு வைர வியாபாரி வந்தான். மன்னன் அவன் கொண்டுவந்து கொடுத்த வைரத்தை வாங்கி இவனிடம் கொடுத்துச் சோதிக்கச் சொன்னான். இவன் வாங்கி கையாலேயே சோதித்து அவற்றை இரண்டு பிரிவாகப் பிரித்து வைத்தான். "இடது பக்கம் இருப்பவை வைரம். வலது பக்கம் இருப்பவை கண்ணாடிக் கல்" என்றான். "எப்படிக்கண்டுபிடித்தாய்?" என்றான் மன்னன். "ஒவ்வொரு கல்லையும் எடுத்துக் கையில் மூடி வைத்திருந்தேன். நமது உடல் சூடு கல்லில் ஏறினால் அது வைரம். ஏறாவிட்டால் அது கண்ணாடி" என்றான். அரசனுக்கு ஆச்சரியம். "சரி இன்றிலிருந்து ஒவ்வொரு பொட்டலம் தயிர் சாதமும் கொடுங்கள்" என்று உத்தரவிடடான்.

ஒருநாள் அந்த மன்னன் அவனிடம் கேட்டான் "என்னை எல்லோரும் பிச்சைக்கார ராஜா என்கின்றனரே..." என்றான். அது உண்மைதான். உண்மையிலேயே நீ அப்படித் தான்"என்றான் இவன். "எப்படிச் சொல்கிறாய்?" என்றான் மன்னன். நீ நிஜமாகவே பரம்பரை ராஜவம்சமாக இருந்திருந்தால் ஆரம்பத்தில் அது வெள்ளரிப்பழம் இல்லை என்று தெரிந்து சொன்னபோதே எனது திறமையைப் பாராட்டி உன் கழுத்தில் உள்ள மணிமாலையைக் கழற்றிப் பரிசாகக் கொடுத்திருப்பாய். அது மட்டுமல்ல ஒரு பொட்டலம் சாம்பார் சாதம், தயிர் சாதம் என்று எந்த ராஜாவும் கொடுக்க மாட்டார்கள்" என்றான்.

அதன் பின் அந்த ராஜா உண்மையைச் சொன்னான் "ஐயா! நான் பரம்பரை ராஜா இல்லை. உன்னை மாதிரி பிச்சை எடுத்துக்கொண்டிருந்தவன் தான். இந்த நாட்டு வழக்கப்படி அரண்மனை யானை என் கழுத்தில் மாலை போட்டது. அதனால் ராஜாவாகிவிட்டேன்" என்றான்.

பார்வையில்லாவிட்டாலும் நுண்ணறிவு எந்த அளவுக்குப் பார்வையாகப் பயன்படுகின்றது என்பதை இதன் மூலம் புரிந்துகொள்ள முடிகிறது. குடும்பத்திலும் இந்த நுண்ணறிவு உபயோகப்படும்.

பெட்டியில் 10 ரூபா பணம் இருந்தது. திடீரென்று 5 ரூபா காணாமல் போய்விட்டது. மீதி 5 ரூபா மட்டும் இருந்தது. "நமது பையன் தான் எடுத்திருப்பான்" என்றார் அம்மா. "நிச்சயமாக இது நமது பையனின் வேலையாக இருக்காது அவன் எடுத்திருக்கமாட்டான்" என்றார் அப்பா. எப்படிச்சொல்கிறீர்கள்? என்றார் அம்மா. "அவனாக இருந்தால் பெட்டியில் மிச்சம் வைத்திருக்க மாட்டான்" என்றார் அப்பா.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சர்வதேச அரங்கில் பிரதமருக்கு மதிப்பும் மரியாதையும் உண்டு

## எஸ்.பி. திஸ்ஸநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வற்கு ஐக்கிய தேசியக் கட்சியினால் மட்டுமே முடியுமென கமத்தொழில் கால்நடை அமைச்சர் எஸ்.பி. திஸ்ஸநாயக்க தெரிவித்துள்ளார்.

சமாதானம் இல்லாமல் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது எனச் சுட்டிக்காட்டிய அமைச்சர் எஸ்.பி. திஸ்ஸநாயக்க,

கடந்த 20 வருடகாலமாக இடம்பெற்று வந்த கொடூர யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்த பெருமை ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கு மட்டுமே உரியது.

பரதமர் ரணில் விக்கிரமசிங்க மிக அர்ப்பணிப்புடன் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்றவர் இதன் காரணமாக அவருக்கு சர்வதேச சமூகத்தில் நல்ல மதிப்பும் மரியாதையும் இருக்கின்றது எனச் சுட்டிக்காட்டினார். (தி-61,10)

# முஸ்லிம்களை தனித்தரப்பாக ஏற்று சமாதானப் பேச்சு தொடரப்படும்

## ஐ.தே. கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஐக்கிய இலங்கைக்குள் அனைத்து சமூக மக்களுக்கும் நீதியும், நேர்மையானதுமான அரசியல் தீர்வொன்றைக் காண்பதையே ஐக்கிய தேசியக் கட்சி விரும்புவதாக அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் பொறளையில் உள்ள ஜே.ஆர். ஜெயவர்த்தன மன்றத்தில் கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரமவினால் நேற்று முன்தினம் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இத்தேர்தல் விஞ்ஞாபனத்தின் முதலாவது பிரதியை ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க பெற்றுக்கொண்டார்.

அத்தேர்தல் விஞ்ஞாபனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை உறுதியாகக் கட்டியெழுப்புவதும் வலுப்படுத்துவதுமே எமது குறிக்கோளாகும்.

ஒஸ்லோ பிரகடனம், டோக்கியோ பிரகடனம், டோக்கியே தல்லமைத்துவம் தரும் அறிக்கைகளில் அறிவிக்கப்பட்ட கொள்கைகளுக்காக சமாதானத் தீர்வை எட்டுவதுமே எமது குறிக்கோளாகும்.

நாட்டு மக்கள் சமாதானத்தை வேண்டி நிற்கும் வேளையில், நாட்டின் பொருளாதாரத்தையும் அவர்களது அபிலாஷைகளையும் நிறைவேற்றுவதற்கு அமைதிச் சூழல் ஒன்று அவசியமாகும். எந்தவிதமான வேறுபாடுகளும் இன்றித் தமது செயற்பாடுகளைத் திறமையான முறையில் நிர்வகிப்பதற்கு அதிகாரப்பரவலாக்கல்களைப் பயன்படுத்திக் கொள்ளும் உரிமை அனைத்துச் சமூகங்களுக்கும் உண்டு என்பதை உறுதிப்படுத்திக் கொள்வது ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையாகும். முஸ்லிம் சமூகத்தைத் தனியான அமைப்பாகக்கொண்டு மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆம்பிப்பதும் ஐக்கிய தேசியக் கட்சியின் நோக்கமாகும்.

தொழில் வாய்ப்புக்களைப் பொறுத்தவரையில் 30 இலட்சம் தொழில்களை உருவாக்கி பொருளாதார வளர்ச்சியை அதிகரிப்பதிலும், அபிவிருத்தியின் நன்மைகளை நாடு முழுமைக்கும் பரவலாக்குவதும் கட்சியின் முக்கிய குறிக்கோளாகும்.

பெருந்தோட்டத்துறை, உயர்கல்வி ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதற்கும் பல்வேறு திட்டங்களை முன்னெடுப்பதற்கும் கட்சி தயாராகவுள்ளது என்றும் அத்தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு வைபவத்தில் ஐக்கிய தேசிய முன்னணியின் அமைச்சர்கள், முன்னாள் எம்.பிக்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ம)

# இராசிபலன்

**17. 03. 2004**

**(பங்குனி 04, புதன்கிழமை)**

**ஏகாதசி முற்பகல் 8.40 மணி வரை**
**திருவோணம் முன்னிரவு 11.05 மணிவரை**
**இராகுகாலம் 12.19-1.49 மணிவரை**
**சுபநேரம் 4.49-6.19 மணிவரை**

***ஏகாதசி விரதம்***

**மேடம்**
நன்கொடை, பிரபுத்தனம், இஷ்ட சித்தி, சுப நிகழ்ச்சி.

**இடபம்**
கட்டுப்பாடு, உடல் உழைப்பு, ஆன்றோரால் மதிக்கப்படுதல், எதிர்பாராத செலவு.

**மிதுனம்**
வீண்தொல்லை, பொருள் விரயம், வயிற்றுக் கோளாறு காரிய தடங்கல்.

**கடகம்**
அபூர்வசந்திப்பு, மனோசௌக்கியம், காரிய சித்தி, பொருள் சேர்க்கை.

**சிங்கம**
ஆரோக்கியம், நண்பர்கள் சந்திப்பு, திடீர் பயணம், காரிய சித்தி.

**கன்னி**
பணக்குறைவு, மனக்கவலை, காரிய தாமதம், வியாபார நன்மை.

**துலாம்**
புத்தி சஞ்சலம், தன விரயம், கல்வியில் ஆர்வம், பயந்த சுபாவம்.

**விருச்சிகம்**
நற்கீர்த்தி, மனோதைரியம், கூட்டு முயற்சி, வாக்கு மேன்மை.

**தனுசு**
அதிக செலவு, மனோசங்கடம், போசன சுகக் குறைவு, கௌரவக்குறைவு.

**மகரம்**
வெகுமானம், வரவேற்பு, நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை.

**கும்பம**
பிதாசிந்தை, பணவிரயம், கோபப்படுதல், சோம்பல் நிலை.

**மீனம்**
தொழில் சிந்தை, நண்பர்கள் சந்திப்பு, மன மகிழ்ச்சி, பெருமையடைதல்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# வன்முறையற்ற தேர்தலுக்கு ஒத்துழைப்பு அவசியம்

## டி.எம். ஜயரட்ண கருத்து

(கொழும்பு)

வன்முறைகளற்ற தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு சகல அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என தொலைத் தொடர்புத் துறை அமைச்சர் டி.எம். ஜயரட்ண வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கம்பளையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

மக்கள் தங்களின் விருப்பத்திற்கு ஏற்ப தேர்தலில் சுதந்திரமாக வாக்களிக்க வேண்டும்.

தேர்தலை நீதியாகவும் நியாயமாகவும் நடத்த அரசியல் கட்சிகள் ஒத்துழைக்கவேண்டும் என்றார். (தி-61,10)

# அபிவிருத்திப் பணியில் புனர்வாழ்வுக்கழகம் ஈடுபாடு

(மருதங்கேணி)

கடந்த கால யுத்தத்தினால் தமது வாழ்விடங்களை இழந்துள்ள வடபகுதி மக்களை இனங்கண்டு அவர்களுக்குரிய புனர்வாழ்வினை வழங்கும் நடவடிக்கைகளில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஈடுபட்டுவருகின்றது.

நிக்கொட் நிறுவனத்தின் அனுசரணையுடன் வட பகுதியில் உள்ள சகல மாவட்டங்களிலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளன.

இத்திட்டத்திற்கான வலுவூட்டல் மற்றும் பயனாளிகளை இனங்காணும் நடவடிக்கைகள் தற்பொழுது துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (கி-35)

# 500 விக்கெற்றை வீழ்த்திய மூன்றாவது வீரன் முரளி

டெஸ்ட் கிரிகெற் வரலாற்றில் 500 விக்கெற்றினை வீழ்த்திய 3வது வீரரும், இரண்டாவது சுழற் பந்து வீச்சாளரும் என்ற பெருமையை இலங்கை அணியின் நடசத்திர மான முத்தையா முரளிதரன் பெற்றிருக்கின்றார். அத்துடன் இலங்கை சார்பாக முதல் 500 விக்கெற்றினை வீழ்த்தியவரும் முரளியே.

அவுஸ்திரேலிய அணிக்கெதிரான நேற்று கண்டி அஸ்கிரிய மைதானத்தில் ஆரம்பமான இரண்டாவது டெஸ்ட் போடடியிலேயே இந்த சாதனையை அவர் ஏற்படுத்தியுள்ளார்.

இரண்டாவது டெஸ்ட் போட்டியில் மைக்கல் கஸ்போவிச்சை போல்ட் முறை ஆட்டமிழக்கச் செயததன் மூலம் இந்தச் சாதனையை அடைந்தார். முரளி இந்த டெஸ்டில் முதலாவது இன்னிங்ஸில அவுஸ்திரேலிய அணிக்கெதிராக 14ஓவர்கள் பந்துவீசி 4மெய்டின்கள் உட்பட 44 ஓட்டங்களைக் கொடுத்து 4விக்கெற்றினை வீழ்த்தினார்.

1992ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற அவுஸ்திரேலிய அணியுடனான 2வது டெஸ்ட் போட்டியில் அறிமுகமான முத்தையா முரளிதரனின் முதலாவது விக்கெற்றாக இரையானவர் ஆஸி. அணியின் வேகப்பந்து வீச்சாளரான மக்டர்மட் ஆவார் இதன் பின் தனது 50விக்கெற் மைக்கல்லைத் தாண்ட சுமார் 2வருடங்கள் சென்றன.

* முரளியின் 50ஆவது விக்கெற்றிற்கு இரையானவர்-இந்தியாவின் நவஜோத் சிங் சிது (1992)

* 100வது விக்கெற்றிற்கு இரையானவர்-தற்போதைய நியூஸிலாந்து அணித்தலைவர் ஸ்டீவன் பிளமிங் (1996/97)

* 150வது விக்கெற்றிற்கு இரையானவர்-சிம்பாப்வேயின் கயிவிட்டேல் (1997/98)

* 200வது விக்கெற்றிற்கு இங்கிலாந்தின் ஹொலி ஒக் இரையானார் (1999)

* 250வது விக்கெற்றாக பாகிஸதானின் நவீட் அஷ்ரஃப் (1999/2000)

* 300வது விக்கெற்றாக தென்னாபிரிக்காவின் ஷோன்பொலக் (2000/01)

* 400வது விக்கெற்றாக சிம்பாப்வேயின் ஹென்றி ஒலங்கா

* 450வது விக்கெற்றாக நியூஸிலாந்தின் டரல் டஃபி

* 500வது விக்கெற்றாக மைக்கல் கஸ்போபிச் இரையானார் என்பது குறிப்பிடத்தக்கது.(தி-121)

## பாக்.இந்திய ஆட்டத்தை பிரியங்காவும் அவரது கணவரும் நேரில் கண்டுகளித்தனர்

இந்தியா- பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே கராய்ச்சியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஒருநாள் கிரிக்கெற் ஆட்டத்தை பிரியங்காவும் அவரது கணவர் ராபர்ட் வதேரா, பிரியங்காவின் சகோதரர் ராகுல் ஆகியோர் நேரில் கண்டுரசித்தனர்.

தேசிய விளையாட்டு அரங்கத்தின் முக்கியப் பிரமுகர்கள் பகுதியின் முதல் வரிசையில் அவர்கள் மூவரும் அமர்ந்திருந்தனர். இநதிய வீரர்கள் சேவாக். கங்குலியின் ஆட்டத்தை மகிழ்ச்சியுடன் ஆரவாரம் செய்து ரசித்தனர்.

காங்கிரஸ் தலைவர் சோனியா காநதியின் மகள் பிரியங்கா காந்தி பாகிஸ்தான் கிரிக்கெற் வாரியத்தின் அழைப்பை ஏற்று கடந்த வெள்ளிக்கிழமை கராய்ச்சிக்குச் சென்றார். அவருடன் வதேரா, ராகுல் ஆகியோரும் சென்றனர். அங்கு ஹோட்டலில் தங்க அவர்கள் திட்டமிட்டிருந்தனா. இந்நிலையில அவர்களுக்கு அரசு விருந்தினர்களுக்குரிய கௌரவத்தை அளிக்க பாகிஸ்தான் அரசு முடிவு செய்தது. இதையடுத்து, அரசு விருந்தினர் மாளிகையில் அவர்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

பிரியங்கா வெள்ளிக்கிழமை சென்ற அதே விமானத்தில் இந்தியாவைச் சேர்ந்த அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள் உள்ளிட்ட 95பேர் சென்றனர். பாகிஸ்தானில் உள்ள மிகப்பெரிய அறக்கட்டளை அமைப்பான 'எதி' அறக்கட்டளை அமைப்புக்கு பிரியங்கா நேரில் சென்றார். அங்குள்ளவர்களுக்குப் பரிசுப் பொருள்களை வழங்கி உரையாடினார். பாகிஸ்தானில் 3நாட்கள் தங்கியிருக்கத் திட்டமிட்டுள்ள பிரியங்கா, தனது பயணத்தின் மூலம் இந்திய-பாகிஸதான் நல்லுறவு வலுப்பெறும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.(தி-121)

## தென்மராட்சிப் பிரதேச போட்டி முடிவுகள்

வடக்கு-கிழக்கு விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடைபெற்றுவரும் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவின் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான குழு நிலைப் போட்டிகள் அனைத்தும் நடைபெற்று முடிவடைந்துள்ளன்.

தொடர்ந்து தடகளப் போட்டி நிகழ்வுகளை இம்மாத இறுதிவாரத்தில் நடாத்த திட்டமிடப்பட்டிருக்கிறது. மேலும் இறுதிநாள் விளையாட்டு நிகழ்வுகளும் இப் போட்டிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வுகளும் எதிர்வரும் ஏப்ரல் மாத முதல் வாரத்தில் நடைபெறவுள்ளன.

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் நடைபெற்று முடிந்துள்ள குழுநிலைப் போட்டி முடிவுகள் வருமாறு,

**உதைபந்தாட்டம் (ஆண்கள்)**

1ம இடம்:-மட்டுவில் வளர்மதி வி.க.
2ம் இடம்:-கதிரொளி வி.க.

**வலைப்பந்தாட்டம் (பெண்கள்)**

1ம் இடம்:-தென்னகத்தாரகை வி.க.
2ம் இடம்:-மட்டுவில் வளர்மதி வி.க.

**எல்லே (ஆண்கள்)**

1ம் இடம்:-சிவன் வி.க.
2ம் இடம்:-மோகனதாஸ் வி.க.

**எல்லே (பெண்கள்)**

1ம் இடம்:-தில்லைநாதர் வி.க.
2ம் இடம்:-கதிரொளி வி.க.

**கரபந்தாட்டம் (ஆண்கள்)**

1ம் இடம்:-மோகனதாஸ்-வி.க.
2ம் இடம்:--மட்டுவில் வளர்மதி வி.க.

**கரபந்தாட்டம் (பெண்கள்)**

1ம் இடம்:-மோகனதாஸ் வி.க.
2ம் இடம்:--மட்டுவில் வளர்மதி வி.க.

**துடுப்பாட்டம் (ஆண்கள்)**

1ம் இடம்:-சரஸ்வதி வி.க.
2ம் இடம்:-பிக்பூட் வி.க.

**துடுப்பாட்டம் (பெண்கள்)**

1ம் இடம்:-வேம்பிராய் பாரதி வி.க.
2ம் இடம்:--மட்டுவில் வளர்மதி வி.க. (தி-68

## ஒருநாள் கிரிக்கெற் தொடரில் சிம்பாப்வே 3விக்கெற்றுக்களால் வெற்றி

சிம்பாப்வேக்குச் சுற்றுப்பயணம் மேறகொண்டிருக்கும் பங்களாதேஷ் அணிக்கும் சிம்பாப்வே அணிக்கும் இடையில் நடைபெற்ற 5வதும இறுதியுமான ஒருநாள் சர்வதேச கிரிக்கெற் போட்டியில், சிம்பாப்வே அணி 3 விக்கெற்றுக்களால் வெற்றி பெற்றுள்ளது. இதன் மூலம் 5 போடடிகள் கொண்டதொடரை 2:1என்ற கணக்கில் சிம்பாப்வே தனதாக்கிக் கொண்டுள்ளது.

கராரேயில் நடைபெற்ற போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அதன்படி 48.5ஓவர்களில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 183ஓட்டங்களைப் பெற்றது.

இவ்வணி சார்பில் துடுப்பாட்டத்தில் கணான் சாகர் 59ஓட்டங்களையும், இஸ்லாம் றணா 63ஓட்டங்களையும் பெற்றனர். பங்களாதேஷ் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான சாகர், றணா ஆகிய இருவரும் முதல் விக்கெறறுக்காக 105ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்துகொண்டனர்.

பந்துவீச்சில் சிம்பாப்வே அணி சார்பில் கீல்த் ஸ்ரீக் 17ஓட்டங்களுககு 2விக்கெற்றினையும் பறைசி 38ஓட்டங்களுக்கு 2விக்கெற்றினையும் கிறாண்ட் பிளவர் 36ஓட்டங்களுக்கு 3விக்கெற்றினையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி 42.3ஓவர்களில் 7விக் கெற்றுக்களை இழந்து 185 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

**விளையாட்டுச் செய்திகள்**

துடுப்பாட்டத்தில் ஆரம்ப விக்கெற்றுக்காக சோடி சேர்ந்த கிறாண்ட் பிளவர், றோஜேஸ் ஆகிய இருவரும் 112ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்துகொண்டதுடன் இருவரும் அரைச்சதங்களைப் பெற்றனர்.

இதல் கிறாண்ட் பிளவர் 59ஓட்டங்களையும், றோஜேஸ் 54ஓட்டங்களையும் பெற்றனர் ஸ்ரீக் ஆட்டமிழக்காமல் 31ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பாக முகமட் 19ஓட்டங்களுக்கு 4விக்கெற்றினை வீழ்த்தினார். (தி-121)

## தேசியமட்டப் போட்டியில் யாழ். அணி 3ஆம்இடம

(தொல்புரம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் அண்மையில் வவுனியாவில் நடாத்தப்பட்ட மாகாண மட்டக் கரபந்தாட்டப் போட்டியில் யாழ்.மாவட்ட அணி முதலாமிடத்தைப் பெற்றுள்ளது.

இதேவேளை, குருணாகலில் நடைபெற்ற தேசியமட்டப் போட்டியிலும் இவ் அணி மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(து-70)

## நிறைவுவிழாவும் விளையாட்டு விழாவும்

(வேலணை)

புங்குடுதீவு சிவலப்பிட்டி சன சமூக நிலையத்தின் 45ஆவது ஆண்டு நிறைவு விழாவும் 23வது விளையாட்டு விழாவும் முறையே எதிர்வரும் ஏப்ரல் மாதம் 12ஆம், 13ஆம் திகதிகளில் சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளன.

(தி-47)

## மேற்கிந்தியத் தீவுகள் அணி மக்களிடம் மன்னிப்பு

இங்கிலாந்து அணிக்கெதிராக ஜமேக்காவில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள அணி அடைந்த படுதோல்வியை அடுத்து மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெற் கட்டுப்பாட்டுச்சபை பொது மக்களிடம் பகிரங்க மன்னிப்பு கோரியுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளின் தாயக மண்ணில் அவ் அணி மிக மோசமான தோல்வியை அடைந்திருந்தமையை அடுத்து மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ரசிகர்கள் பெரிதும் விசனம் அடைந்திருந்தனர்.

இங்கிலாந்து அணிக்கெதிராக ஜமேக்காவில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடியிருந்தாலும், 2வது இன்னிங்ஸில் 47ஓட்டங்களுக்கு தமது அனைத்து விக்கெற்றையும் இழந்து 10விக்கெற்றுக்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணியிடம தோல்வியைத் தழுவியது.

மேலும் மேற்கிந்தியத் தீவுகள் அணி டெஸ்ட் போட்டியின் ஓர் இன்னிங்ஸில் பெற்ற ஆகக்குறைவான ஓட்டமாக 47ஓட்டங்கள் பதிவாகியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் இந்தத் தோல்வியை அடுத்து அணியின் 4வீரர்கள் களியாட்ட நிகழ்வுகளில் ஈடுபட்டிருந்ததாகவும், அவ் வீரர்களுக்கெதிராக மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெற கட்டுப்பாட்டுச்சபை கடுமையான ஒழுக்காற்று நடவடிககைகளை எடுத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இங்கிலாந்து மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெற் போட்டி எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.(தி-68)

## ஏப்ரல் நடுப்பகுதியில் இலங்கை அணி சிம்பாப்வே விஜயம்

இலங்கை கிரிக்கெற் அணி ஐந்து ஒருநாள் மற்றும் 2டெஸ்ட் போட்டிகளின பொருட்டு ஏப்ரல் 17ஆம் திகதி சிம்பாப்வே புறப்படவுள்ளது.

ஒருநாள் போட்டித்தொடர் ஏப்ரல் 20ஆம் திகதியும், டெஸ்ட் போட்டித் தொடர் மே மாதம் 6ஆம் திகதியும் ஆரம்பமாகவுள்ளன.

ஒருநாள போட்டித்தொடரின் பின் 3 நாள் பயிற்சி ஆட்டத்திலும் இலங்கை கலந்துகொள்ளும். சிமபாப்வே அணியுடனான இந்த ஆட்டம் மே முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இப் போட்டித்தொடரின் விபரங்கள் வருமாறு,

ஏப்ரல்-17இலங்கை அணி புலவாயே வந்தடைதல்

ஏப்ரல்-20முதலாவ்து ஒருநாள் போட்டி-புலவாயே

ஏப்ரல்-22 2ஆவது ஒருநாள் போட்டி-புலவாயே

ஏப்ரல்-25 3ஆவது ஒருநாள் போட்டி-ஹராரே

ஏப்ரல்-27 4ஆவது ஒருநாள் போட்டி-ஹராரே

ஏப்ரல்29 5வது ஒருநாள் போட்டி-ஹராரே

**இலங்கை அணியின் சிம்பாப்வே போட்டி**

மே 1-3 பயிறசி ஆட்டம்-ஏ அணியுடன்.

மே 6-10 முதலாவது டெஸ்ட் போட்டி- ஹராரே


மே 14-18 இரண்டாவது டெஸ்ட் போட்டி புலவாயே. (தி-121)



தனது பக்கத்து வெற்றிவாய்ப்பைத் தவறவிட்டதற்காக தலையில் கைவைத்த நிலையில் கெவின் குரோன்சி



சிட்னி மரோபரா கடற் கரையில் நடைபெற்ற அலைதாவல் போட்டியில் ஹைலி பெயிலி.



புளோரிடாவில் நடைபெற்ற போட்டியில் அவுஸ்திரேலியவைச் சேர்ந்த நொபேட் அலன்பி ஒரு பந்தை விளாசியடித்த நிலையில்.



ஜோர்ஜியா மாகாணத்தில் ஹம்ரன என்னுமிடத்தில் நடைபெற்ற மோட்டார் கார் போட்டியில் ஸ்ரேலில் மார்லின் தனது டெஸ்ட் காரை ஓட்டிய நிலையில்.



மெக்ஸிக்கோ காரோட்டர் போட்டியில் இரண்டாமிடத்தில் பிரான்னொய்ஸ்டுவலும் ஸ்ரெப்கன் பிரிவோட்டும் அவர்களது போட்காரில்

# உங்கள் குழந்தைகளின் உணவில் ஊட்டச் சத்துக்கள் மிகுந்துள்ளதா?

பெற்றோர்களே, உங்கள் குழந்தைகளுக்கு "உணவுப் பொறி"களை உருவாக்குவது குறித்து எச்சரிக்கையாக இருங்கள். "உணவுப்பொறி என்பது என்ன?"என்று நீங்கள் கேட்கலாம். இக்கேள்வி குறித்து சற்று பார்ப்போம்.

நாள் முழுவதும் உங்களுக்குப் பல வேலைகள் காத்திருக்கின்றன. இச்சமயத்தில் உங்களுடைய சிறுபிள்ளைகள் சண்டை சச்சரவில் ஈடுபட்டுக் கூக்குரலிடுகிறார்கள். உடனே ஏதாவது செய்தாகவேண்டும் என்ன செய்வீகள்?

அல்லது, படுக்கைக்குச் செலலும் நேரம் ஆனபோதிலும் உங்கள் குழந்தைகள் அடம்பிடிக்கின்றன. தின்பதற்கு எதையாவது லஞ்சமாகக் கொடுத்து அமைதிப்படுத்துவீகளா? அது அவர்களை அமைதிப்படுத்துவதாக நீங்கள் காரணம் கூறலாம், வீட்டைச் சந்தடியற்றா தாக்கி ஒரு தெளிவை உண்டு பண்ணுவதாக எண்ணலாம். குழந்தை பிறந்தது முதல் தாயப்பால் அல்லது புட்டிப் பால் ஏதேனும் ஒன்று குழந்தையின் வாயை அடைப்பதுதானே- நிச்சயமாக இதுவேலை செய்கிற தீர்வுதான். அதே நேரத்தில் இப் பழக்கம் ஒரு பொறியை வைப்பதை நாம் அறிவதில்லை. "அப்படியானால் என்னதான் செய்வது"என்ற கேள்வி எழுகிறது.

தீர்வுகளில் நல்லவை, தீயவை அல்லது சிறந்தவை எனப் பிரிவுகள் உண்டு.ஆனால் இறுக்கமான மன நிலையில் எதைத் தெரிந்தெடுப்பது அவ்வளவு லேசில் விளங்கிவிடுவதில்லை. எனவே கடினமான காலகட்டங்களில் எப்படிப்பட்ட முடிவுகளை எடுக்க வேண்டும் என்பதை முன்கூட்டியே தெரிந்துவைத்துக்கொள்வது சிறந்தது. இது எளிதும், பாதுகாப்பானதும் கூட. இதனால் பல வகைப் பொறிகளைத் தவிர்கலாம்.

## தெரிந்தெடுத்தல்

உள்ளதில் சிறந்தது எது, செய்யக்கூடியது எது என அறிவது பின்வருவனவற்றை வெளிப்படுத்தும்:

1.ஓர் இனிப்பு: அலறலையும் சண்டையிடும் குணத்தையும் நிறுத்தும். இனிப்புக்களால்வாயில் அமிலம் உருவாகின்றது; பக்ரீறியாக்களை பல்கிப் பெருகச் செய்கிறது,பற்சிதைவு உண்டாகிறது; குழந்தைகளின் பற்களுக்கு இது கெடுதல் என்பது உங்களுக்குத் தெரியும்.

2.சரி,அடுத்து-ஒரு பிஸ்கெட்டைக் கொடுத்தால் என்ன...? இனிப்பிலுள்ள அளவு சர்க்கரையில்லை.ஆனால் இதுவும் பற்சிதைவை உருவாக்கக் கூடுமா? படுக்கையில் நொறுக்கு முறுக்கு எனச் சத்தம் கேட்பது நல்லதா?

3.அப்படியானால் ஒரு பழம் கொடுத்தால் என்ன...? ஓர் அப்பிள்,வாழைப்பழம் அல்லதுசிறிது திராட்சை?

4.அல்லது உங்கள் குழந்தைகளுக்கு தாகமாக இருக்காலம். தாகமாயிருக்கும்போது குழந்தைகள் நிறைய முரண்டு பிடிக்கின்றனர்.அனால் அவர்களின் எரிச்சலைக்கொண்டு இதுதான் தேவை என்று சரிவரக் கணிக்க முடிவதில்லை. குழந்தைகளுக்குப் பல மணிநேரம் எதையுமே குடிக்கக் கொடுக்கவில்லை-அந்தளவு உங்கள் வேலை மிகுதி.

இப்படிப்பட்ட தெரிவுகளில் கடைசிதான் மிகவும் சிறந்தது. குழந்தைகளின் தேவைகளைத் தீர்க்க நீங்கள் ஒரு அரைமணிநேரம் செலவிட்டுவிட்டால் நேரம் வீணாகிவிடாது. உங்கள் கவனம், அன்பு, பாதுகாப்பு போன்றவை தேவை என்பதற்காகவே குழந்தைகள் அலறவும், அழவும் கூடும். சாப்பாட்டு இடைவேளைகளில் குழந்தை அருந்த ஏதாவது ஒருபானம் தருவதும் சிக்கலை வெகு எளிதாக தீர்க்கும். ஊட்ட உணவை குழந்தைகள் தட்டாமல ஏற்க இது நல்லது. நொறுக்குத் தினிகளில் அப்பிள் அல்லது வாழைப்பழங்களை , ஒரேஞ்சு மற்றும் உலர்ந்த பழவகைகளை சேர்க்கலாம். பானங்கள் என்றால் புத்தம் புதிய-தூய பழச்சாறுகளையும் ஐஸ் போட்ட பானங்களையும் சேர்க்கலாம். இடைவேளைகளில் சாண்விச்சுகள்,பிஸ்கட்டுக்கள்,பழங்கள் அகியவற்றை விசேஷமான வடிவங்களில் தந்து குழந்தைகளைக் குதூகலப்படுத்தலாம்.

## தொட்டிலில் தொடங்குகள்

ஒரு மகிழ்ச்சியான ஆரோக்கியமான நபரின் வளர்ச்சிக்கு ஆரோக்கியமான உணவுமுறை தேவை. இதை கருத்தாங்கியது முதலே தொடங்குவது சிறப்பு. தாய்மார்கள் கவனமாக ஆரம்பிக்கவேண்டும். "குபபை உணவுகள்"என்னும் பொறியில் அகப்பட்டு இளம் தாய்மார்கள் தமது உணவையும் தம் குடும்பத்தினரின் உணவையும் ஆரோக்கியமற்றவையாக ஆக்கிக் கொள்ளக் கூடும்.எனவே உணவு முறையைத் திருத்தவேண்டும் என்பதை உணர்வது அவசியம். குடும்பத்தினரின் உணவு ஊட்டம் மிக்கதாகவும், பரபரப்புடன் இயங்கும் தாய்மார்களுக்கு உதவும் பழக்க வழக்கங்களை நிலைநிறுத்தவும் பின்வரும் குறிப்புகள் உதவும்.

1.முதலில் கடையில் வாங்கும் மளிகை சாமான்களில் தொடங்க வேண்டும்.சாமான் பட்டியலிடுமுன் ஒருவாரத்துக்குத் தேவைப்படும் பொருட்கள், உணவு வகைகள் பற்றி முன்னதாகவே சற்று நேரம் செலவிட்டு ஒழுங்கு பண்ணிக் கொளளுங்கள்.இதன்மூலம் சரியான உணவு வகைகளை வாங்கி பயன்படுத்தமுடியும்.

2.அடிப்படையில் நல்ல ஊட்டச்சத்துள்ள உணவுபொருட்களைத தெரிந்தெடுங்கள். முழுத் தானிய உணவுகள்: ரொட்டி, புத்தம் புதிய பழவகைகள், காய்கறிகள், சர்க்கரை கலவாத பழச்சாறுகள், பால், பாலாடைக் கட்டி அல்லது தயிர், பயறுவகைகள், வெண்ணெய், நெய் மற்றும் முட்டைகள் இதில் அடங்கும். வெண்ணெய், நெய், முட்டைகளைப் எப்போதேனும் ஒருமுறை பயன்படுத்தினால் போதும். பல வகை உணவுகளை உண்பது உணவிலுள்ள ஊட்டத்தை அதிகரிக்கும். என்பதை மறக்கக் கூடாது. காரணம் -வெவ்வேறு உணவுகளில் தாது உப்புக்கள், விற்றமின்கள், புரோட்டின்கள்,கொழுப்பு, கார்போஹைதரோட்டுக்கள் போன்றவைகளின் அளவு வேறுபடுகின்றன.ஒரு உணவுப் பொருளில் மிகுந்து காணப்படும் ஒரு ஊட்டச்சத்து, அடுத்த உணவுப் பொருளில் குறைவுபடலாம்.

3.குடும்ப உறுப்பினர்கள் யார் யாருக்கு எதுவெது பிடக்கும் என்தைப் பற்றி யோசியுங்கள். ஒருவருக்கு கரட் பிடிக்கலாம் மற்றவருக்கு வெள்ளரியும் வேறு ஒருவருக்கு வேர்க்கடலைப்பசையும் பிடிகக்கலாம். ் ருளைக்கிழங்கு எல்லோருக்குமே பிடிக்கலாம். இவையாவும் கலந்த உணவு குடும்பத்துக்கு ஏற்ற சிறப்பான உணவு.

4. பலவகைப் பழங்களையும் காய்கறிகளையும் உண்ணும் படி உங்கள் குழந்தைகளை ஊக்கப்படுத்துங்கள், நல்ல உணவுப் பழக்கங்களை கடைப்பிப் பதில் பெற்றோர்கள் முன்மாதிரியாக இருந்தார்களானால் பிள்ளைகள் வெகு விரைவாக அதைப் பின் பற்றத் தொடங்கி விடுவார்கள. நல்ல உணவுப் பழக்கங்களைக் கற்பிக்கும் போது பெற்றோர்களின் முன் மாதிரிகை தான் பிள்ளைகளுக்கு உதவுகிறது. அல்லது பொறியில் சிக்க வைக்கிறது. பெற்றோர்களின் ஒத்துழைப்பிற்கு சாப்பாட்டு வேளை தான் மிக அற்புதமான வேளை.

## சாப்பாட்டுவேளையில்...

உணவு ருசித்துச் சாப்பிடும் வகையில் இருந்தால் சாப்பாட்டு வேளை மகிழ்ச்சிகரமானதாக இருக்கும். குடும்பத்தினர்-பெற்றோரும் பிள்ளைகளும் ஒருவர் மிது ஒருவர் அன்பைப் பகிர்ந்து கொள்ளும் உற்சாகமான வாய்ப்புகள் சாப்பாட்டுவேளைகளில் உண்டு.ஒவ்வொரு நபரும் பேச்சில் கலந்துகொள்ள அனுமதிக்கப் படவும் ஊக்கப்படுத்தப்படவும் வேண்டும். உணவு உண்ணும் முறைகளும் கற்பிக்கப்பட வேண்டும். தகப்பனார், மூத்த சகோதர-சகோதரிகளின் முன்மாதிரிகையைப் பின்பற்றி வீட்டில் தயாரிக்கப்படும் நல்ல சாப்பட்டிற்கு விசேடமான உணவு வகைகளை அளிப்பதற்கும் தாயாருக்கு நன்றி சொல்லக் கற்றுக் கொள்வார்கள்.

## பொறியில் சிக்குவது எளிது

"இனிப்புப்பொறி"மிகத் தந்திரமான முறைகளில் ஒன்று. ஏனெனில் அது வாழ்வின் மிகத் தொடக்க வயதுகளிலேயே இடம் பெற்றுவிடுகின்றன. இனிப்புக் கலந்த தானிய உணவுகள் பால்,சிற்றுண்டிகள் மற்றும் பழங்கள் போன்றவற்றை உண்டு; குழந்தைகள் இனிப்புச் சுவைகண்டு கொள்கிறார்கள்.தேனோ, சர்க்கரையோ கலவாமல் உணவுப் பொருட்களை அவற்றின் இயல்பான சுவையுடன் வைத்திருப்பதும் ஆரோக்கியமான உணவுகளை விருப்புவதற்குப் பிள்ளைகளை வழிநடத்துகின்றது. இது குப்பை உணவுகள் மற்றும் இனிப்புப் பொறி ஆகியவற்றில் இருந்து பெரிய பிள்ளைகளும், பெரியவர்களும் விலகுவதற்கு உரிய நடவடிக்கையாகவும் உள்ளது.

இந்தப் பொறியில் ஏற்கனவே அகப்பட்டிருந்தால் பழக்கங்களை முறியடிக்க பல வாரங்கள் -பல மாதங்கள் கூட ஆகலாம்.ஆனால் பொறியிலிருந்து விடுபட முடியும். இனிப்பு வகைகளை பழங்களைக் கொண்டு ஒரங்கட்டலாம். இனிப்பு வகைகளை முழுத்தானிய உணவுகளைக் கொண்டு முறியடிக்கலாம்.நிறைவைத் தருவதற்கு உணவுகளில் போதுமான அளவு புரோட்டினும் நார்ப் பொருட்களும் இருக்கவேண்டும். சிற்றுண்டிகள் அடங்காத-நிறைவைத்தரும் உணவுகளைப் பெறத்திட்டமிடுங்கள். கடை வீதிக்குச் செல்லும் போது இனிப்புக்கள் வாங்குவதைத் தவிருங்கள். இனிப்புக்கள் வீட்டில்இருந்தால் சாப்பிடல்ாம் (பசியோடு இருக்கும் போது கடைகளில சாமான்வாங்கச் செல்லாமல் இருப்பது சிறப்பு, இதனால் கண்டதையும் வாங்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றாது) இன்னொரு எச்சரிக்கை-வெகுமதியாக இனிப்புக்கள் தர வேண்டாம்! இனிப்புக்களை இப்படி விரும்பத்தக்கவையாக ஆக்குவதால் அவற்றின் மீதான ஆர்வம் மேலும் அதிகரிக்கின்றது.

## ஏனைய உணவுப் பொறிகள்

வேறு என்னென்ன உணவுப் பொறிகள் உள்ளன? வளர்ந்த பிள்ளைகளுக்கு "உப்புப்பொறி" வைக்கிறோம்.உப்பிட்ட உணவுப் பணடங்கள் அனைத்திலும் நொறுககுக்கள் அனைத்திலும் அதிகளவு உப்புள்ளது. ஒரு நபருக்கு ஒரு நாளுக்குத் தேவையான உப்பு ஒரேஒரு தேக்கரண்டிதான் "கொழுபபுப்பொறி"யும் நாம் விழுகின்ற இன்னொரு பொறிதான்.பொரித்த உணவுகள் அனைத்திலும் கொழுப்பு மிகுந்துள்ளது. பெரும்பாலான உணவுகளில் உள்ள கலோரி ஆற்றல் 40 சதவீதம் கொழுப்பைச் சார்ந்துள்ளது. உடலுக்குத் தேவைப் படும் பல்வேறு தாது உப்புக்கள், மிற்றமின்கள், நார்ப் பொருட்கள் அப்படியே உடலில் அடுக்கடுக்காக அடுக்கப்பட்டு விடுகின்றன.அடுத்ததாக சர்க்கரைமிகுந்த பல்லிலுள்ள எனாமலை அழிக்கும்பான வகைகளற்ற, ஊறு காய்கள், தாளித்த உணவுகள், குழம்பு வகைகள் -சமநிலையற்ற சத்துக்கள் உள்ள உணவுகளை உண்ண வேணடும் என்ற உணர்வை அதிகபடுத்துகின்றன. இவை யாவும் குழந்தைகளுக்குத் தேவையற்றவை .இளமையில் பிள்ளைகளின் உடல் வளர்ச்சிக்கும் உடல் நலத்துக்கும் நல்ல ஊட்டச்சத்து அடங்கிய உணவு தான் தேவை.

வாழ்நாள் நெடுகிலும் தொடரக் கூடய நல்ல உணவுப் பழக்கங்களைப் பிள்ளைகள் கற்றுக் கொள்ள வேண்டும்.நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு உணவுப் பொறிகளை உருவாக்கி வைக்கிறீகளா அல்லது அவர்களது உடல்-மனம்-ஆன்ம வளர்ச்சி நாள்தோறும் மேம்படுவதற்கு உதவும் உணவுப் பழக்கத்தை ஏற்படுத்த உதவி செய்கிறீர்களா? ★

**தயாநிதி**

---

# மருத்துவ பீட இறுதியாண்டு பரீட்சை முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட எம்.பி.பி.எஸ். இறுதியாண்டுப் பரீட்சைமுடிவுகள் வெளியாகியுள்ளன.

இப்பரீட்சைப் பெறுபேறுகளின் படி முதல் தரத்தில் எவரும் சித்தியடையவில்லை.

***,ரண்டாம்தரம் (மேற்பிரிவு)***

ரி.பிரம்யா,ஏ.ஜெபனந்தி, ஆர்.கவிதா,எஸ். குமரன், எஸ்.குமுதினி,எஸ்.ரஞ்சிதா,

***,ரண்டாம் தரம் (கீழ் பரிவு)***

ரி.ஆரணி,ரி.அரவிந்தன், ஏ.பிருந்தா, எஸ்.காயத்திரி, என்.இந்திரநாத், கே.ஜெகு, எம்.மதனா,ஜி.பாமினி, கே.பிரிந்திகா,ஆர்.சஞ்சிதா ,கே.சங்கவி, ஜி.செந்தூரன், எஸ்.சிவபாலன், ஜி.சுபாஜினி, என்.சுகந்தன், கே.சுந்தரரேசன்,வி.வரணிதரன்,

***சாதாரண சித்தி***

டபிள்யூ.ஏ.கூங்கே,கே.அகிலேந்திரன, பி. அனுஷா, எம். அரவிந்தன், ஆர்.கோபித், எஸ். கிறேஸ் ஏஞ்சலின் மலர் நங்கை, கே.ய சோதா, பி. ஜெயச்சங்கரன், எஸ். ஜெயசீலன், ரி.கலைச் செல்வி ,எஸ். கவிதா, கே.மனோன்மணி, ஏ.மேரி அகிலா, கே. பார்த்தீபன்,ரி. பிரதீபன், ஏ.பிரதீப், ஏ.ரகுபதி,

எஸ்.சாய்யொளிபனவன், எஸ். சதீஸ்,எஸ்.செல்வ துஷயந்,ஏ .சர்மிளா, ரி. சிவரூபன், கே.சுதேஷ்வரி, வி.தமிழ்வாணி, சி.தர்சினி, எம்.துஷ்யந்தன் ,கே.விக்னேஸ்வரன், பி.யாழினி, ஏ .யாழினி,வையதுனந்தனன், ஜே.ஜெனற் சிந்தியா. (தி)

# தண்ணீர் பந்தல்

(கந்தர்மடம்)

கைதடிப்பிள்ளையார் ஆலயம் முன்பாக தண்ணீர் பந்தல் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் பங்குனித் திங்கள் உற்சவத்தில் கலந்து கொள்ளச் செல்லும் அடியார்கள் நலன் கருதியே இப்பந்தல் அமைக்கப் படவுள்ளது.இதற்குரிய ஏற்பாடுகளில் கைதடிப் பிள்ளையார் ஆலய தர்மகத்தா சபையினர் ஈடுபட்டு வருகின்றனர். (தி-112)

# முறைப்பாடுகளை ஏற்க பொலிஸார் தயக்கம்

தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் சில பொலிஸ் நிலையங்களில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லையென்ற புகார்கள் தமக்குக் கடைக்கப் பெற்றுள்ளதாகப் பொலிஸ்மா அதிபர் இந்திரா டிசில்வா தெரிவித்துள்ளார்.

வன்முறைச் சம்பங்களுடன் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் தரப்பிலிருந்து விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் காரணமாகவே,சில பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளை ஏற்பதில் தயக்கம் காட்டப்பட்டு வருகிறது. இது விடயம் தொடர்பாகப் பூரண விசாரணைகளை மேற்கொண்டு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதேவேளை, எந்த வொரு நபரும் இவ்வாறான முறைப்பாடுகள் ஏற்கப்படாமை குறித்துப் பொலிஸ் தலைமையகத்தில் முறையிடலாம் எனவும் பொலிஸ்மா அதிபர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (த-18)

# 63 சிறிய பைகளில் போதைப் பொருள் மீட்பு

வவுனியா தேக்கவத்தைப் பகுதியில் வைத்து 63சிறிய பைகளில் பொதி செய்யப்பட்ட போதைப் பொருட்களினை வவுனியா பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இது தொடர்பாக இரகசியத் தகவல் கிடைத்தவுடன் விசேடக் குழுவினர் விரைந்து சென்று ஆயிரத்து 230 மில்லி கிராம் போதைப் பொருளைக கைப்பற்றியதுடன், நபரினையும் கைது செய்துளளனர். வவுனியாவில் தற்போது போதைப் பொருள் பாவனை குறைந்துள்ள போதிலும் இவ்வாண்டு இதுவரை 2சம்பவங்களே பிடிபட்டிருப்பதாவும் கடந்த ஆண்டு போதைப் பொருள் சம்பந்தமான 35 வழக்குகளைத் தாம் கையாண்டதாகவும் பொலிஸ நிலையப் பொறுப்பதிகாரி ஆர். எம். விஜயநாயக்க தெரிவித்தார்.

போதைப்பொருளினை ஒழிப்பதற்காக விசேடக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதுடன் மன்னாரிலிருநது வவுனியாவுக்கு வரும் சந்தேகத்திற்கிடமான வாகனங்களும் பரிசோதனை செய்யப்படுவதாக தெரிவித்த அவர், தென்னிந்தியாவில் இருந்து மன்னார் ஊடாகவே அதிகளவான போதைப்பொருட்கள் கடத்தப்படுவதாகவும் தமக்கு தகவல்கிடைத்திருப்பதாக போதைப் பொருள் பாவைக்குள்ளாகிய பலர், புனர்வாழ்வு அளிப்பதற்காக அனுபப் பட்டு இருப்பதாகவும் மேலும் குறிப்பிட்டுள்ளார். (தி-18)

## ஸ்பயின் நாட்டுப் பொதுத் தேர்தலில் ஆளும் கன்ஸர்வேட்டிவ் கட்சி தோல்வி

(மாட்ரிட்)

ஸ்பெயின் நாட்டுப் பொதுத் தேர்தலில் ஆளும் கன்ஸர்வேட்டிவ் மக்கள கட்சி தோல்வியடைந்தது. சோஷலிசத் தொழிலாளர் கட்சி வெற்றிவாகை சூடியது.

தேர்தலுக்கு மூன்று நாட்கள் இருந்த நிலையில், கடந்த வியாழக்கிழமை 4 ரயில்களில் அடுத்தடுத்துக் குண்டுகள் வெடித்தன. இதில் 200 பேர் இறந்தனர். 1500 பேர் காயமடைந்தனர். இச்சம்பவம் ஆளும் கட்சியின் வெற்றி வாய்ப்பைப் பறித்துவிட்டது.

மொத்தம் 350 உறுப்பினர்களைக் கொண்ட ஸ்பெயின் நாடாளுமன்றத்தில் சோஷலிச தொழிலாளர் கட்சி 43.01சதவீத வாக்குகளைப் பெற்று 164 இடங்களைக் கைப்பற்றியது. ஆளும் கன்ஸர்வேட்டிவ் மக்கள் கட்சி 37.47 சதவீத வாக்குகளைப் பெற்று 148 இடங்களைப் பிடித்தது. 77சதவீதத்துக்கும் அதிகமான வாக்காளர்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்தினர் என உள்த்துறை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஜனநாயகத்துக்கும் நாட்டு மக்களுக்கும் கிடைத்த வெற்றி இது. பயங்கரவாதத்துக்கு முடிவு கட்டுவதில் புதிய அரசு முன்னுரிமை தரும் என்று சோஷலிசத தொழிலாளர் கட்சியின் தலைவர் ஜோஸலூயி ரோட்திகஸ்ஸபாதிரோ தெரிவித்துள்ளார்.

ஈராக் மீது அமெரிக்கக் கூட்டுப்படை நடத்திய தாக்குதலுக்கு ஸ்பெயினின் 90 சதவீத மக்கள் எதிராகவே இருந்தனர். இவற்றைக் கருத்திற் கொள்ளாது போருக்கு ஆதரவாக 1300 வீரர்களை முன்னாள் பிரதமர் அஜோஸமரியா அஸ்னா அனுப்பியதால் மக்கள் அவர்மீதும் அவர் கட்சிமீதும் அதிருப்தி கொண்டிருந்தனர்.

தேர்தலுக்கு ஒருவாரத்துக்கு முன் நடத்தப்பட்ட கருத்துக் கணிபபில் குறைந்த பட்சப் பெரும்பான்மை பலத்துடன் ஆளும் கட்சி மீண்டும் வெற்றிபெறும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், தேர்தல் நடைபெறுவதற்கு மூன்று தினங்கள் இருக்கையில் நடந்த ரயில் குண்டுவெடிப்பு எல்லாவற்றையுமே மாற்றிவிட்டது.

ஈராக் மீது அமெரிக்கக் கூட்டுப்படை தாக்குதல் நடத்தியபோது அதற்கு ஆதரவாக ஸ்பெயின் சார்பில் 1300 வீரர்கள் அனுப்பப்பட்டிருந்தனர். இதற்குப் பழிதீர்க்குமுகமாகவே ரயில்களில் குண்டுகள் வைக்கப்பட்டதாகவும், அதற்கு அல்-ஹெய்டா அமைப்பு பொறுப்பு என்றும் தெரிவிக்கும் ஒளிநாடா கண்டெடுக்கப்பட்டுள்ளது. (து)



ஸ்பெயின் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி வாகை சூடிய ஸ்பெயின் சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் ஜோஸ் லூயி ரோட்ரிகஸ் ஸபாதிரோ.

## இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கு எதிராக பாகிஸ்தான் அதிபர் முஷாரப் கண்டனம்

பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் பிரஸாவ் நகரில் பழங்குடிப்பெரியவர்கள் மத்தியில் பேசுகையில், சென்ற ஆண்டு தன்னைக் கொல்ல முயற்சித்தது அல்-கெய்டாதான் என்று குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

சென்ற டிசெம்பர் மாதம் தான நூலிழையில் உயிர் பிழைத்த இரண்டு கொலை முயற்சிகளை ஏற்பாடு செய்ய உதவியது அல்கெய்டா அமைப்பின் லிபிய நாட்டு உறுப்பினர்கள் தான் என முஷாரப் கூறினார்.

பாதியளவு சுயாட்சி பெற்ற பாகிஸ்தான் பழங்குடியினர் பகுதியில பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 500, 600 தீவிரவாதிகள் தங்கியிருக்கிறார்கள் என்று முஷாரப் முதல் தடவையாக வெளிப்படையாகக் கூறியிருக்கிறார்.

ஆப்கானுடனான எல்லைப் பகுதியில் பதுங்கியிருக்கின்ற இஸ்லாமிய தீவிரவாதிகள் பற்றி இதுவரையில் அவர் வெளியிட்டிருக்கின்ற வலுவான கருத்து இது தான்.

இதனிடையில், கராச்சியில் அமெரிககத் தூதரகத்துக்கு வெளியே பெரிய குண்டொன்றைப் பாகிஸ்தான் இராணுவநிபுணர்கள் செயலிழக்கச் செய்திருக்கிறார்கள்.

நூற்றுக்கணக்கான லீற்றர் வெடிபொருள் இரசாயனமும், வெடி இயக்கிகளும், அதற்கான மணிக்கூடுகளும் பொருத்தப்பட்டு ஒரு சிறிய வான் தூதரகத்துக்கு வெளியே நிறுத்தப்பட்டிருந்தது. அந்த வானை ஓட்டிவந்தவர்கள் தூதரக காவலர்களிடம் வண்டியில் கோளாறு என்று கூறி அங்கு அதை நிறுத்திவிட்டு வேறு வண்டியில் சென்றிருக்கின்றனர்.

பின்னர் குண்டைச் செயலிழக்க வைக்கும் இராணுவ நிபுணர் குழு வந்து அந்த வண்டியை ஒரு விளையாட்டு மைதானத்துக்குக் கொண்டு சென்று அக்குண்டுகளை செயலிழக்கச் செய்திருக்கிறது.

அமெரிக்க அரசதுறைச் செயலர் கொலின் பவல் பேச்சுவார்த்தைகளுக்காக பாகிஸ்தான் வருவதறகு இரண்டு நாட்களுக்கு முன்னால் இந்தச் சம்பவம் நடந்திருக்கிறது. ஆனால், கொலின் பவல் கராச்சி செல்வதற்கான திட்டமெதுவும் இல்லை. (து)

## அமெரிக்க வாகனம் மீது துப்பாக்கிப் பிரயோகம்

(ஈராக்)

ஈராக்கில் அமெரிக்கப் பிரஜைகள் பயணம் செய்துகொண்டிருந்த வாகனம் ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 3 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் இருவர் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

ஈராக்கின் பக்தாத் நகருக்கு வடக்கே 390 கிலோமீற்றர் தொலைவிலுள்ள மொசூல் நகரில் மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இத் துப்பாக்கிப் பிரயோகச் சம்பவததில் காயமடைந்த இருவரும் அமெரிக்க இராணுவ ஹெலிகொப்ரர் மூலம் இராணுவ வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தை அமெரிக்க இராணுவம் உறுதிப்படுத்தியுள்ளது. இத்தாக்குதலுக்கு உள்ளானவர்கள் பற்றிய ஏனைய விபரங்கள் குறித்து விபரம் எதுவும் வெளியிடப்படவில்லை. (து-18)



சென்னை பாரிமுனையில் உள்ள ஒரு தெருவில் தொலைக்காட்சிப்பெட்டியை வைத்து இந்தியா - பாகிஸ்தான் ஒரு நாள் கிரிக்கெற் போட்டியைக் காணும் கீழ்த் தட்டு கிரிக்கெற் ரசிகர்கள்.

## சிலியின் வெளிவிவகாரக் கொள்கையில் மாற்றங்களைக் கொண்டுவர முயற்சி

(சிலி)

சைபிரஸில் புதிய பிதமராகப் பதவி ஏற்கவிருக்கும் போர்ட்டின் லூஸி லோட்டிவர் ஷப்போஷேரோ அந்நாட்டின் வெளியுறவுக் கொள்கைகளில் முக்கிய மாற்றங்களைக் கொண்டுவரப்போவதாக அறிவித்துள்ளார்.

ஈராக்கில் இருக்கும் சிலி நாட்டின் அமைதிகாக்கும் படைகளைத திரும்ப அழைக்கப்போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஈராக்கில் தலையிட்ட நடவடிக்கை தொடர்பாக அமெரிக்கா மற்றும் பிரிட்டனை அவர் வெளிப்படையாக விமர்சித்திருக்கிறார்.

சிலியின் வெளிநாட்டுக் கொள்கையில் தீவிரமான மாற்றங்கள் கொண்டுவரப்படுமென தேர்தல் பிரசாரத்தின்போது கொடுத்த வாக்குறுதிக்கிணங்க தேர்தல் முடிவுகள் வெளிவந்த சிலமணி நேரங்களுக்குள் ஷப்பாஷோரோ தமது வெளியுறவுக் கொள்கையின் விபரங்களை வெளியிட்டார்.

ஈராக்கிலிருந்து தமது அமைதி காக்கும் படைகளை தான் திருப்பி அனுப்பப்போவதாகவும், அதுவே மக்களின் விருப்பம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்க அதிபர் புஷ் மீதும் பிரிட்டிஷ் பிரதமர் பிளேயர் மீதும் இராஜதந்திரத்துக்குப் புறம்பான வகையில் கண்டனக்கணைகளையும் அவர் தொடுத்தார்.

இவர்கள் சுயவிமர்சனம் செய்ய வேண்டுமென்றும், ஈராக் மீதான போர், ஈராக் ஆக்கிரமிப்பு இரண்டுமே ஓர் பேரழிவு என்றும் அவர் கூறினார்.

சிலியின் பிரிவினைவாத அமைபபான 'எட்டா' வுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது உட்பட பயங்கரவாதத்தை எதிர்க்க அனைத்துலக ரீதியில் எடுக்கப்பட்டுவரும் முயறசிகளின் முன்னணியில் இருக்கும் சிலியின் இரு முக்கிய தோழமை நாடுகளுடன் முரண்பட்டு நிற்கும் நிலையை அவர் எடுத்திருக்கிறார்.

சிலி, ஈராக்கிலிருந்து தனது 1300 துருப்புக்களை திருப்பி அழைத்தால் அது அங்குள்ள அமெரிககாவின் தலைமையிலான கூட்டணிக்கு ஓர் அடியாக இருக்கும். ஆனால், அவர் உண்மையிலேயே தனது துருப்புக்களை திருப்பி அழைப்பாரா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

ஈராக்கின் மறு சீரமைப்புக்காகச் செயல்படும் 30 நாடுகளைக் கொண்ட கூட்டணியில் இருக்கும் பிரிட்டனும் போலந்தும் மற்றைய நாடுகளும் தாங்கள் அங்கு தொடர்ந்து பணியாற்றப் போவதாகவும் அடுத்த யூலை மாதமளவில் பதவி ஏற்கவிருக்கும் ஈராக்கிய அரசுக்கு ஆதரவு வழங்கபபோவதாகவும் தெளிவாகக் கூறியுள்ளன. எது எவ்வாறு இருந்தாலும், ஷப்பஷேரோவின் கூற்று ஈராக் குறித்து ஐரோப்பாவில் ஏற்பட்டிருக்கும் அரசியல் பிளவையும் அமெரிக்காவுடனான உறவு பற்றிய முரணையும் மீண்டும் துவக்கி இருக்கிறது. (து)

## பாகிஸ்தான் அணுவாயுத விஞ்ஞானிக்கு லிபியா 100 மில்லியன் அமெ. டொலர் இலஞ்சம்

(வாஷிங்டன்)

பாகிஸ்தானிலிருந்து அணுவாயுத உற்பத்தி தொடர்பான தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக் கொளவதற்கு லிபியா சுமார் 100 மில்லியன் அமெரிக்க டொலர்களைச் செலவிட்டுள்ளதாக அமெரிக்கா சுட்டிக் காட்டியுள்ளது.

அணுவாயுத உற்பத்தி தொடர்பான உதவிகளைப் பெறுவதற்கு லிபியா, பாகிஸ்தானின் அணுவாயுத விஞ்ஞானி அப்துல் கதிர்கானுக்கு சுமார் 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியதாக அமெரிக்காவின் புஷ் நிர்வாகத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

லிபியா, ஈரான் மற்றும் வட கொரியா ஆகிய நாடுகளுக்கு அணுவாயுத உற்பத்தி தொடர்பான தொழில நுட்பங்களை விற்றதாக விஞ்ஞானி அப்துல் கதிர்கானும் முன்னர் ஏற்றுக் கொண்டிருந்தார்.

இச் செயற்பாடுகள் குறித்து பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் கவலை வெளியிட்டிருந்தார். ஆயினும், அணுவிஞ்ஞானி அப்துல் கதிர்கானின் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள் தெளிவற்ற நிலையில் உள்ளபோதிலும், பாகிஸ்தான் ஜனாதிபதி சுமார் 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை லிபியாவிடமிருந்து பெற்றுக்கொண்டுள்ளதாக அமெரிக்காவின் அவ் உயர் அதிகாரி மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (து-18)

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
**சி.பத்மநாதன்**
பேராதனைப் பல்கலைக்கழகம்.

75

## நான்காம் பகுதி
## முக்குவர் சட்டம்

### 1.மட்டக்களப்பு தேசம்
#### மாகோனும் வன்னிமைகளும்

கொட்டியாரம் முதலாகப் பாணமை வரையில் உள்ள வன்னியர் ஆண்டுதோறும் கண்டி மன்னனுக்கு யானை, தேன்,மெழுகு முதலியவற்றைத் திறையாகக்கொடுக்க வேண்டும். போர்க்காலங்களிலே படைகளைத் திரட்டிக் கொடுப்பதோடு போர் நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்குவதுமுண்டு. அத்துடன் இராச்சிய பரிபாலனந் தொடர்பான விடயங்களில் அவர்களுக்குக் கௌரவமானதும் பிரதானமானதுமான ஒரு பங்கு கிடைத்திருந்தது. இராச்சியத்திலுள்ள பிரதானிகளை இராசதானிக்கு வரவழைத்து அவர்களின் ஆலோசனைகளைக் கேட்டறிந்தபின்பே அரசன் முக்கியத்துவம் வாய்ந்த முடிவுகளை மேற்கொள்வது 'வழமை. அத்தகைய விடயங்களில் கிழக்கிலங்கை வன்னியர்களும் பங்குகொள்வதுண்டு.

ஜயவீர பண்டார்னுக்கு எதிராக விமலதர்மன் போர் புரிந்த காலத்தில் வன்னியர் ஜயவீரனுக்கு ஆதரவு புரிந்தார்கள் என்று ஒல்லாந்த பாதிரியாரான பிலிப்பூஸ் வோல்டே (Philippus Baldaeus) குறிப்பிடுகிறார். பழுகாமத்து வன்னியன் 5890 படைவீரர்களையும் ஆயிரம் கூலியாட்களையும், 25 அலியன் யானைகளையும் , 3 போர் யானைக்களையும் அனுப்பி வைத்தான். மட்டக்களப்பு வன்னியன் 9800 போர் வீரர்களையும், 2000 தொழிலாளரையும், 2500 மாடுகளையும், 30 அலியன் யானைகளையும், 4 போர் யானைகளையும் அனுப்பியிருந்தான். பாணமை முதலான ஏனைய பற்றுகளைச் சேர்ந்த வன்னியர்கள் 59,896 படையினரையும், 2140 தொழிலாளரையும், 16000 மாடுகளையும், 63 அலியன் யானைகளையும் அனுப்பினார்கள் என்று சொல்லப்படுகின்றது. படைவீரரின் எண்ணிக்கை பற்றிப் பாதிரியார் சொல்லும் கணக்கு மிகைப்படுத்தப்பட்டுள்ளது போலத் தெரிகின்றது. ஆயினும் வன்னியர்களில் ஒவ்வொருவரும் கணிசமான அளவிற் படைகளை வைத்திருந்தனர் என்பது அவருடைய குறிப்பால் உணரப்படுகின்றது.

ஒல்லாந்தரின் கடற்படைத் தளபதியான ஸ்பில்வேர்கென் (Spillbergen) கண்டி மன்னனோடு தொடர்புகொள்ளும் நோக்கத்தோடு 1602-1603 ஆகிய காலப்பகுதியில் இரு தடவைகள் மட்டக்களப்புக்கு வந்தான் .இரண்டாவது தடவையாக வந்தபொழுது மட்டக்களப்பு வன்னிபமான தர்மகங்காதரனுடன் தொடர்பு கொள்ள நேர்ந்தது. அவர்களின் சந்திப்புத் தொடர்பான குறிப்பிலே மேல்வரும் விபரங்கள் உள்ளன.

1603ஆம் ஆண்டிலே மே மாதம் 29ஆம் திகதி ஸ்பில்வேர்கென் ஏரியைச் சென்றடைந்தான். அங்கிருந்து வன்னிபமான தர்ம கங்காதரனிடம் தூதுவரை அனுப்பினான். வன்னிபத்தின் அதிகாரிகள் ஒரு போர்த்துக்கேய மொழிபெயர்ப்பாளரையுங் கூட்டிக்கொண்டுபோய் ஸ்பில்வேர்கெனைக் கப்பலில் சந்தித்தார்கள். பெருமளவிலே மிளகினையும் கறுவாவினையுந் தரலாம் என்று அவர்கள் ஒல்லாந்த தளபதிக்குச் சொன்னார்கள். தங்கள் ஆட்சியாளனுடைய அலுவல்களைக் கவனிக்கின்ற முதலியார் தளபதியைச் சந்திக்க விரும்புகிறார் என்றும் அவரைக் கரையிலே சென்று பார்க்கலாம் என்றும் அவர்கள் ஸ்பில்வேர்கெனுக்கு எடுத்துரைத்தார்கள். அந்த அதிகாரிகளுக்கும் அவர்ளோடு கூடிச்சென்ற மொழிபெயர்ப்பாளருக்கும் அழகிய கண்ணாடிப்பொருள்களையும் வேறு சிலவற்றையும் உபகாரமாகத் தளகர்த்தன் வழங்கினான்.

மறுநாள் மூன்று ,நான்கு மெய்ப்பாதுகாவலர் சகிதமாக ஸ்பில்வேர்கென் தரையிறங்கியபொழுது அவனுக்கு இராசமரியாதைகளுடன் வரவேற்பளிக்கப்பட்டது. 5 யானைகள் முன்னங்கால்களை மடக்கி முழந்தாள்களை நிலத்தில் ஊன்றிய கோலத்திலே ஒல்லாந்தர் தளபதியை வரவேற்றன. மிகவுஞ் சிநேகபூர்வமான முறையிலும் உபசாரங்களோடும் முதலியார் தளபதியை வரவேற்றான்.

மறுநாள் வன்னிபத்தைச் சந்திப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மூன்றாம் திகதி ஸ்பில்வேர்கென் நானாவிதமான இசைக்கருவிகளை ஏந்திய வாத்தியக்காரர் சகிதம் கப்பலிலிருந்து இறங்கி வந்தான். பல வெகுமதியான உபகாரங்களையும் வன்னிபத்திற்கு வழங்கினார்கள். ஐந்தாம் திகதியன்று மீண்டும் ஒருமுறை இருவரும் சந்தித்தனர். அச் சமயத்தில் 1400 வீரர்கள் வாளேந்திய கோலத்தில் வரிசையாக வன்னிபத்தின் முன் நின்றனர்.

வன்னிபத்தின் கையிலும் வாள் இருந்தது. தனது மரியாதைகளுக்கு அடையாளமாக ஸ்பில்வேர்கென் பல உபகாரங்களை இம்முறையும் வன்னிபத்திற்கு வழங்கியதோடு வாத்தியக் கச்சேரி ஒன்றையும் ஒப்புவித்தான். வன்னிபம் இவற்றையுற்றுப் பெரிதும் மகிழ்ச்சியடைந்தான். அதன் பின்னர் வன்னிபத்தின் கட்டளைப்படி ஒல்லாந்தரை முதலியாரின் மாளிகைக்கு அழைத்துச்சென்று விமரிசையாக விருந்துபசாரம் செய்தனர். பின்பு ஸ்பில்வேர்கென் கண்டி இராசதானிக்குப் போய்க் கோட்டை ஒன்றைக் கட்டுவதற்கான அனுமதியை அரசனிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடிந்தது.

மட்டக்களப்பு வன்னிபமான தர்ம கங்காதரனைப் பற்றிய குறிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். வன்னிபங்கள் மத்திய கால வரலாற்றிலே கொண்டிருந்த பங்கினை ஒருவாறு அனுமானித்து உணர்ந்து கொள்வதற்கு அது அனுகூலமாய் உள்ளது. தேச வரலாறு பற்றி புரிந்துணர்வுகளைச் செம்மைப்படுத்திக்கொள்வதற்கும் அது ஆதாரமாயுள்ளது. வன்னிபங்களின் நிர்வாகவதிகாரம் பற்றியும் படைப்பலம் பற்றியும் முன்பு கவனித்தோம். 1602-3 ஆகிய காலத்தில் மட்டக்களப்பு வன்னிபமான தர்மகங்காதரன் அத்தகைய தகைமைகளைக் கொண்டிருந்தான். அவனுடைய பிராந்தியத்தின் விவகாரங்களை முதலியார் ஒருவர் கண்காணித்து வந்தார். அவரின் கண்காணிப்பின் கீழ் அதிகாரிகள் பலர் கடமை புரிந்தனர். ஒல்லாந்த தளகர்த்தனை வரவேற்குமிடத்துத் தர்மகங்காதரன் அரசன் ஒருவனுக்குரிய சீர்வரிசைகளோடு காணப்பட்டான். அவன் 1400 வாட்படை வீரர் சகிதமாக ஒல்லாந்தர் தளபதியை வரவேற்றான். கண்டி. இராச்சியத்திலே கிழக்கிலங்கை வன்னியருக்கு வழங்கப்பட்டிருந்த உரிமைகளும் இக்குறிப்பின் மூலம் ஒருவாறு உணரப்படுகின்றன. பிராந்திய நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருந்ததோடு முழு இராச்சியத்தின் பரிபாலனம் சம்பந்தமாகவும் அவர்களுக்குப் பொறுப்புகள் இருந்தன. இராச்சியத்தின் சார்பில் வெளிநாட்டவர்களோடு கொண்டிருந்த உறவுகளிலும் வன்னியர் பங்குகொண்டுள்ளமை குறிப்பிடற்குரியது. தர்மகங்காதரன் மட்டக்களப்பு வன்னிபம் என்ற வகையிலும் கண்டி இராச்சியத்திற்கு அரச பிரதானி என்ற வகையிலுமே ஸ்பில் வேர்கெனோடு தொடர்பு கொண்டமை குறிப்பிடற்குரியது.

கி.பி. 1611 இல் ஏரியின் மூலமான போக்குவரத்துக்கள் பற்றிய கடவு வரிகள் தொடர்பாக பழுகாமம் ,போரதீவு ஆகிய பகுதிகளின் வன்னியரிடையே தகராறு ஏற்பட்டது. அதனை ஆராய்ந்து தீர்ப்பதற்கு இராசதானியில் அரச சபை கூடியது. அங்கே கொட்டியாரத்து வன்னிபமான இடலி, பழுகாமத்து வன்னிபம் செல்லபண்டாரம், மட்டக்களப்பு வன்னிபம் குமார பண்டாரம், போரதீவு வன்னிபம் தர்மசங்கரி, பாணமை வன்னிபமான சமரவாய் ஆகியோரும் பிரசன்னமாயிருந்தனர். செல்லபண்டாரம், தர்மசங்கரி ஆகிய வன்னிபங்கள் இருவரும் பகைமையான நடவடிக்கைகளை நிறுத்திக்கொள்ளவேண்டும் என்றும், அல்லாதவிடத்து அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

(தொடரும்)

## எரிபொருள் நிரப்பு நிலைய செயற்பாடு ஸ்தம்பிதம்

(இணுவில்)

மருதனார்மடம் சந்தியில் உள்ள எரிபொருள் நிலையம் செயற்படாததால் விவசாயிகள் மற்றும் வாகன சாரதிகள் என பலரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருக்கின்றனர்.

நீண்டநாட்களாக இந்த எரிபொருள் நிலையம் இயங்காத நிலையில் உள்ளதனால் பல இடங்களிலும் இருந்து வரும் வாகனச் சாரதிகள் பெரும் ஏமாற்றமும் சிரமமும் அடைந்து திரும்பிச் செல்கின்றனர்.

முக்கிய சந்தியில் இது அமைந்துள்ளதாலும் இப் பகுதி விவசாயிகள் அடங்கிய இடமென்பதாலும் இந்த எரிபொருள் நிலையத்தினை விரைவில் மீண்டும் செயற்படுத்தித் தருமாறு இணுவில் கிழக்கு விவசாயிகள் சம்மேளனம் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளது. (தி-122)

## மாணவர்களுக்கு உதவி

(தொல்புரம்)

மூளாயில் உள்ள சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவித்திக்குமான நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட தியாகி அறக்கொடை உதவித்திட்டத்தின் கீழ் வலி. மேற்குப்பிரதேச செயலர் பிரிவில் உள்ள பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்களின் அனுசரணையுடன் கல்வியில் ஆர்வமுள்ள வசதி குறைந்த 100 மாணவர்களை தெரிவு செய்து அதில் முன்னுரிமை அடிப்படையில் 56 மாணவர்களுக்கு கல்விக்கான உதவிக்கொடுப்பனவுகள் நிறுவன மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டன. (தி-70)

## தெங்குச் செய்கையாளர்களுடன் படையதிகாரிகள் சந்திப்பு

(பலாலி)

யாழ்.மாவட்ட தெங்கு உற்பத்தியாளர் சங்கத்திற்கும் யாழ். மாவட்ட படையதிகாரிகளுக்கு மிடையிலான முக்கிய சந்திப்பு ஒன்று கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றுள்ளது.

கொடிகாமம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால தலைமையில் இடம் பெற்ற இச் சந்திப்பில் தென்மராட்சிப் படைத்தளபதிகள் சார்பாக 51வது,55வது டிவிசன் கட்டளைத்தளபதிகளும் தென்மராட்சிப் பகுதி தெங்குச் செய்கையாளர் சார்பாக தெங்கு உற்பத்தியாளர் சங்கத்தலைவர் ஏ.நல்லதம்பி ,செயலாளர் எஸ். பத்மநாதன் பிரதேச முகாமையாளர் எஸ். சிவச்சந்திரன் ஆகியோர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது இராணுவ பாதுகாப்பு வலயங்களுள் காணப்படும் தென்னந்தோட்டத்தின் விளைபொருட்களைப் பெறவும், தோட்டங்களைப் பராமரிப்புச் செய்யவும் அனுமதிக்கவேண்டும்.

கடந்த காலயுத்தத்தினால் தெங்குச் செய்கையாளர்கள் எதிர் கொண்ட நஷ்டங்களை ஈடுசெய்யும் வகையில் இழப்பீடுகள் பெற்றுத்தரவேண்டும். படையினரால் தென்ன மரங்கள் தறிக்கப்படுவது நிறுத்தப்படவேண்டும் போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

யாழ். அரச அதிபரின் சிபார்சின் பேரில் முன்னுரிமை கொடுக்கப்பட்டு மிதிவெடிகளை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகள மேற்கொள்ளப்படும். தென்னந்தோட்டங்களில் மீளக்குடியமர அல்லது தென்னை தோட்டங்களைப் பராமரிப்பதற்கு அவற்றின் உரிமையாளர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கபடுவதுடன், அழிக்கப்பட்ட தென்னந்தோட்டங்களுக்கான நஷ்டஈடுகள் குறித்த விபரங்களை அவ்வப்பிரதேச தெங்கு உற்பத்தியாளர்கள் சபை முகாமையாளர்களுடைய சிபாரிசுகளுடன் சமர்பிக்க வேண்டும் என படைத்தரப்பு தெரிவித்தது.

கடந்த கால யுத்தத்தினால் அழிந்து போன பனை ,தென்னை மரங்களை மீள் நடுகை செய்வதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக படையினர் தெரிவித்தனர்.

இதேவேளை, சில முக்கியமான கோரிக்கைகள் மேலதிக சிபாரிசுகளுக்காக உயர் தலைமைப்பீடத்திற்குப் பெற்றுத்தரப்படும் என உறுதியளிக்கப்பட்டது.

இச்சந்திப்பின் முடிவில் தென்னந்தோட்ட உரிமையாளர்களின் கோரிக்கைகளை விரைவுபடுத்தி நிறைவேற்றும் பொருட்டு படைத்தரப்பினரால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களும் படையினரால் வழங்கப்பட்டன.

(தி-4,43)





# செய்தித் துளிகள்

## மாணவர்கள் சிரமம்

(கந்தாமடம்)

உசன்யாழ்நகருக்கிடையே சேவையிலீடுபடும் பாடசாலைச் சேவை பஸ்ஸில் ஏற்படும் நெரிசல் காரணமாக அதில் பயணிக்கும மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

காலையில் இடம்பெறும் இச சேவையல் ஒரேயொரு பஸ் மட்டுமே ஈடுபட்டு வருகின்றது. இதனால் உசன் பகுதியிலிருந்து நகர்ப்புறப் பாடசாலைகளுக்குச் செல்லும் சுமார் 200ற்கும் மேற்பட்ட மாணவாகளும் இவ் ஒரேயொரு பஸ்ஸிலேயே பயணிக்க வேண்டிய சூழ் நிலை காணப்படுகின்றது. இதன் நாரணமாக இவ் பஸ்ஸில் ஏற்படும் நெரிசலால் மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் கொள்கின்றனர். (தி-112)

## சுயதொழில் கடன்

(மருதங்கேணி)

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் வாழும் பெண்களைக் குடும்பத் தலைவர்களாகக்கொண்ட 13குடும்பங்களிற்கு கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

சுயதொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் நோக்குடன் உலக உணவு ஸ்தாபனத்தினால் இக் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. பெண்களைக் குடும்பத் தலைவர்களாகக் கொண்டிருக்கும் இக் குடும்பங்களிற்கே இவ் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி சிறு கைத்தொழிலில் ஈடுபடுவோருக்கு தலா 25ஆயிரம் ரூபாவும் கால்நடை வளர்ப்புகளில் ஈடுபடுவோருக்கு தலா 15ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன. (தி-35)

## நோய்த் தடுப்பு மருந்து வழங்கல்

(கந்தர்மடம்)

பட்டினிக்கு எதிரான நிறுவனததினரால் நெடுந்தீவில் விநியோகம் செய்யப்பட்ட கோழிக்குஞ்சுகளுக்கான நோய்த்தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

தீவுப்பகுதிக்கான கால்நடை வைத்திய அதிகாரி கணேசராசாவும் பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் வெளிக்கள உத்தியோகத்தர் அருட்செல்வமும் இணைந்து இம் மருந்து வழங்கலில் ஈடுபட்டுள்ளனர்.

இப்பகுதிகளில் உள்ள 35பயனாளிகளுக்கு பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினால் வழங்கப்பட்ட 560 கோழிக்குஞ்சுகளுக்கே இம் மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.. (தி-112)

## காணி அன்பளிப்பு

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை வைத்திய சாலைக்கு சென்னையில் வசித்து வரும் கருணாகரன் குடும்பத்தினர் சுமார் 30இலட்சம் ரூபா பெறுமதியான காணியை நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

மாவட்ட வைத்திய அதிகாரி வைததிய கலாநிதி மயிலேறும் பெருமாள் தலைமையில் இடம் பெற்ற காணி கையேறகும் நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் கலந்துகொண்டார். (தி-52)

## பொதுசபைக் கூட்டம்

(இணுவில்)

வலி.தெற்கு அரச ஓய்வூதியர் சங்கத்தின் அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் பொதுச் சபைக்கூட்டம் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. இக் கூட்டத்தில் 2004ஆம் ஆண்டுக்கான உத்தியோகத்தர் தெரிவும் இடம்பெறவுள்ளது. (தி-122)

## மாணவர் வாழ்வில் திருக்குறள் நூல் வெளியீடு

(மருதங்கேணி)

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தின் "மாணவர் வாழ்வில் திருக்குறள்" எனும் நூல் வெளியீட்டுவிழா இன்று புதன்கிழமை மு.ப.10.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்டப் பண்பாட்டு மண்டபத்தில் சங்கத் தலைவர் வே.பரமநாதபிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகமும், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம், கரைச்சி பிரதேச செயலர் பொன்.நித்தியானநதன் ஆகியோரும், கௌரவ விருந்தினராகத் தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரனும் கலந்து கொள்ளவுள்ளனர். (தி-35)

## கவிதை, கட்டுரை போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

ஆண்டுதோறும் இடம்பெற்று வரும் கம்பன் விழா இவ்வாண்டு எதிர்வரும் மே மாதம் 20,21,22, 23ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

வழமைபோல் இவ் விழாவினையொட்டி அமரர் துரை விஸ்வநாதன் ஞாபகார்த்தப் பேச்சு, கவிதைப் போட்டிகள் நடைறெவுள்ளன.

இப் போட்டியில் கலந்துகொள்ள விரும்புவோர் தமது சுயவிபரக் கோவையை உறுதிப்படுத்தி "ச. ஆ.பாலேந்திரன் கொழும்பு கம்பன் கழகமம், 11,இராமகிருஷ்ண தோட்டம் கொழும்பு-06என்னும் முகவரிக்கு அடுத்தமாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (தி)

## நன்கொடை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட சன சமூக நிலையங்களுக்கு கடந்த வருடத்திற்கான நன்கொடைப் பணம் வழங்கப்படவுள்ளது.

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் உள்ள 25சனசமூக நிலையங்களுக்கு தலா ஆயிரத்து 600ரூபா வீதம் 40ஆயிரம் ரூபா பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

இவ நன்கொடைப் பணம் வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் நாரந்தனை உப அலுவலகத்தில் இடம் பெற்றுள்ளது. (தி-75)

## சங்கத்தைப் பதிவுசெய்ய நடவடிக்கை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச சங்கத்தை பதிவு செய்வதற்குரிய நடவடிக்கைகள் இடம்பெற்று வருகினறது. இச்சங்கத்தை கூட்டுறவுத் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்வதற்கு கடந்த 3வருடங்களுக்கு மேலாக முயற்சி செய்யப்பட்டு வந்த போதிலும் தற்பொழுதே பதிவு செய்வதற்குரிய நடவடிக்கை இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (தி-75)

## நாய்களுக்கு தடுப்பூசி

(சுதுமலை)

வலி-தென்மேற்கு பிரதேச சபையின் கீழ் உள்ள சுதுமலை, ஆனைக் கோட்டைப் பகுதிகளில் நாளை வியாழக்கிழமை வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதன் பிரகாரம் காலை 9.00 மணிக்கு சுதுமலை வடக்கு ஈஞ்சடி வைரவர் கோவிலடி நாவலர் சன சமூக நிலையத்திலும் காலை 10.00மணிக்கு சுதுமலை தெற்கு அண்ணாமலை வீதி யுவசக்தி சன சமூக நிலையத்திலும் காலை 11.30மணிக்கு நவாலி கிழக்கு சென் பீற்றேஸ் சனசமூக நிலையத்திலும் பகல் 1.00மணிக்கு ஆனைக்கோட்டை 4ம் கட்டை தியாகசீலம் 'சிறுவர் பூங்காவிலும்' வைத்து நாய்களுக்கு தடுப் பூசி ஏற்றப்படவுள்ளது. (தி-252)

# பிரதமரின் முன்னைய செயற்பாட்டால் அபிவிருத்திகள் பலவற்றுக்குத் தடை

## ஜனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் தற்போது நீதியும், சமாதானமும் மிகவும் சீர்குலைந்துள்ளதுடன், பண்பும் ஒழுக்கமும் அருகியுள்ளன.

இந்நிலையில் நாடு இருக்கும் போது, நாட்டின் பொருளாதாரம் உட்பட ஏனைய துறைகளை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்வது என்பது சாதகமற்ற ஒன்று என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

நாட்டிலுள்ள சகல தரப்பினரதும் உரிமைகளுக்கும் அபிலாஷைகளுக்கும் மதிபபுக்கொடுத்து இனி வரும் காலங்களில் தூரநோக்குடன் செயற்படவுள்ளோம்.

நாட்டு மக்களிடையே பண்பும் ஒழுக்கமும் வலுவாகக் குறைவடைந்துள்ளமையினாலேயே கொலை கொள்ளை உட்பட ஏனைய வன்முறைகள் அதிகரித்துள்ளன.

இதனால நாட்டில் நீதியும் சமாதானமும் சீர்குலைந்துள்ளதுடன் ஏனைய துறைசாாந்தவற்றிலும் பின் தங்கியுள்ளது. இந்நிலை மாற்றப் படவேண்டும். இவற்றை மாற்றியமைத்து நாட்டை அபிவிருத்தியடையச் செய்வது ஒவ்வொருவரதும் தலையாய கடமையாகும்.

அத்துடன், விரைவில நீதியும் நியாயமுமான ஓர் நிலையை நாட்டில் உருவாக்கி நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்வதற்கு அரசியல் தலைவர்கள் அனைவரும் தூரநோக்குடன் செயறபட வேண்டியதும் மிகவும் அவசியமாகுமெனக் குறிப்பிட்டுள்ளார்.(தி-18)



# அமைச்சர் எஸ்.பிக்கு எதிராக விரைவில் குற்றப் பத்திரிகை

(கொழும்பு)

உயர் நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக கமத்தொழில் கால்நடை அமைச்சர் எஸ்.பி.திஸ்ஸநாயக்கவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா சட்டமா அதிபர் கே. சி.கமலசபேசனைக் கேட்டுள்ளார்.

உயர் நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில், கடந்த நவம்பர் மாதம் "அபரவெவ" வில் உரையாற்றியிருந்தார் எனத் தெரிவித்து அப்பகுதியில் உள்ள 3 நபர்கள் அண்மையில் உயர்நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்கள்.

இம்மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழுவினர் அமைச்சர் எஸ்.பி.திஸ்ஸநாயக்க உயர் நீதிமன்றை அவமதிக்கும் வகையில் உரையாற்றியுள்ளார் என்றும் ஒருமுகமாகத் தீர்மானித்தனர்.

இதனையடுத்து பிரதம நீதியரசர் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபரைக் கோரியுள்ளார். (தி-60,10)

# பொது நூலகங்களை புனரமைக்க நூலக ஆவணசபை நடவடிக்கை

(சுதுமலை)

வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் கீழ் உள்ளூராட்சி மன்றங்களால் நிர்வகிக்கப்படும் பொதுநூலகங்களை வினைத்திறனுடையதாக்குவதற்கு கொழும்பு தேசிய நூலக ஆவணவாக்கல் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக சகல மாநகர சபைகள், பிரதேச சபைகள, நகர சபைகளின் செயலாளர்களிற்கு வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி உதவிப்பணிப்பாளர் பி.ஜெகதீஸ்வரன் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் பொதுநூலக சேவை மிகவும் அத்தியாவசிய சேவைகள் எனக் கருதப்பட்டுள்ளது. பிராந்தியத்தில் உள்ள மக்களின் நலன்கருதி நூலக சேவைகள் தர நிர்ணயம் செய்தற்கு வசதியாக அடிப்படை வசதிகள பற்றிய விபரங்களை மிக விரைவாக அனுப்பி வைக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒவ்வோர் நூலகமும் எதிர் காலத்தில் நூலக சேவைகளை மக்களிற்கு வழங்குவதற்கு வசதியாக கட்டடம், தளபாடம், ஆளணி போன்ற தேவைகள் தொடர்பாகவும் விபரஙகள் குறிப்பிடப்படவேண்டும்.

வார நாட்களில் குறைந்தது 10மணித்தியாலங்களாவது நூலக சேவை இருக்கவேண்டும். அத்துடன், செயறபடும் நூலகக் குழு அல்லது வாசகர் சங்கம் ஒன்றும் அவசியம் அமைக்கப்படுவதுபற்றியும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி-252)

# குடாநாட்டு நிலவரம் குறித்து யுனஸ்கோ பிரதிநிதி ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

குடாநாடு மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக யுனஸ்கோ நிறுவனத்தின் ஆசிய-பசுபிக் ஆலோசகர் தார்ஜா விர்ரனன் யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளைச் சந்தித்துள்ளார்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில்,

அத்துடன, குடாநாட்டில் காணப்படும் மனித உரிமை மீறல்கள், உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவது, இணையத்தினால் மக்களுக்கு உதவிகளை வழங்கப் போதிய வளங்கள் இன்மை போன்ற பிரச்சினைகள் குறித்து சுட்டிக்காட்டப்பட்டது.

இதற்கு யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தன்னாலான உதவிகளை வழங்குவதாக அவர் உறுதியளித்தார்.

இக் கலந்துரையாடலில கியூடெக் நிறுவனப் பிரதிநிதி, இலங்கை சர்வோதயம் அமைப்பின் பிரதிநிதி, அகதிகள் புனர்வாழ்வு நிறுவனப் பிரதிநிதி ஆகியோர் கலந்து கொண்டனர். (தி-3)

# காரைநகரில் நிரந்தர பொலிஸ் நிலையம் அமைப்பு

(காரைநகர்)

காரைநகரில தற்காலிகமாக உபபொலிஸ் நிலையமாக அமைக்கப்பட்ட பொலிஸ் நிலையம் கடந்த வாரம் முதல் நிரந்தர பொலிஸ் நிலையமாக அமைக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இப் பொலிஸ் நிலையத்தில் தற்போது சிறு குற்றப்பிரிவு விசாரணைகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலதிக விசாரணைகள் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தினூடாக மேற்கொள்ளப்படுவதாக காரைநகர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜி.எச்.அசோக் தெரிவித்துள்ளார்.

பொறுப்பதிகாரி மேலும் தெரிவிக்கையில், காரைநகரில் தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றதற்கான முறைப்பாடுகள் எதுவும் இதுவரை பதியப்படவில்லை. தேர்தல் நிலைமைகள் காரைநகரைப் பொறுத்தளவில் சுமுகமாக உள்ளன.

எமகது ஆவணங்கள் முழுமையாக வந்துசேரவில்லை. அவை வந்தவுடன் எதிர்வரும் காலங்களில் போககுவரத்து பிரிவு உட்பட அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளது. காரைநகரின் பொலிஸ் நிலைய புதிய கட்டடம் வலந்தலைச் சந்தியில் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (தி-246)

# மருத்துவர் போராட்டம் 6வது நாளாகவும் தொடர்ந்தது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்டு வரும் அரச மருத்துவர்களின வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று 6வது நாளாகவும் தொடர்ந்தது.

இதனால் பல அரசாங்க வைத்தியசாலைகளில் நோயாளர்களை அனுமதிக்கும நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் நோயாளர்கள் பெரும அசௌகரியங்களுக்குள்ளாவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் அரச மருத்துவர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்தினால் நோயாளர்கள் பெரிதாகப் பாதிக்கப்படவில்லையென்றும் வெளிநோயாளர் பிரிவு தவிர்ந்த ஏனைய அத்தியாவசிய மருத்துவ பிரிவுகள் இயங்குகின்றதாக சம்பந்தப்பட்ட வைத்தியசாலை வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. (தி-06,10)

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசியல் யாப்பில் மாற்றம் அவசியம்

## முன்னாள் எம்.பி. விக்கினேஸ்வரன் தெரிவிப்பு

(திருகோணமலை)

**தற்பொழுது நடைமுறையில் உள்ள இலங்கையின் அரசியல் யாப்பினை மாற்றி அமைப்பதற்கு மூன்றில் இரண்டு பெரும் பான்மையோ சர்வஜன வாக்கெடுப்போ தேவையில்லை. அரசியல் யாப்பினை மாற்றியமைக்க போகிறோம் என்பதை மக்களுக்கு தெளிவுபடுத்தி அவர்களின் ஆணையை பெறுவதன் மூலம் இலகுவில் அரசியல் யாப்பினை மாற்றியமைத்து விடலாம். இதுவே தற்பொழுது இலங்கையின் பாராளுமன்ற முறைமைக்குப் பெருத்தமான வழி.**

இவ்வாறு ஈழ மக்கள் ஜன நாயகக்கட்சியின் திருகோண மலை மாவட்ட முதன்மை வேட் பாளரும்,முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான வைத்தியக் கலாநிதி காசிலிங்கம் விக்கினேஸ் வரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தினால் நடாத்தப்பட்டு வரும் " வடியும்வேளை" நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்று கையில் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் தெரிவிக் கையில்,

### அரசியல் யாப்பில் மாற்றம் அவசியம்

நீண்டகாலமாக இலங்கையில் நிலவி வரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படவேண்டுமாயின் தற் பொழுது நடைமுறையில் உள்ள இலங்கை அரசியல் யாப்பினை திருத்தம் செய்தோ அல்லது புதி தாக அமைத்தோ தான் மாற்றம் செய்ய வேண்டும்.

இதனை யார் எவ்வாறு செய் யப்போகிறோம் என்பதுவே தற் பொழுதுள்ள பிரச்சினை. இத் தகைய அரசியல் யாப்பு மாற் றத்தை உருவாக்குவதற்கு மக் களின் ஆணையை பெற்று ஆட்சிக்கு வரும அரசாங்கம் தனது சட்ட வாக்கு அதிகாரங்களைப் பயன் படுத்தி பாராளுமன்றத்தில் மூன் றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெறவேண்டும். பின் அது மக்களின் ஆய்வுக்காகவும் கருத்துக்கணிப்புக்களுக்காகவும் விடப்பட்டு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படல் வேண்டும். இதில் மாற்றம் செய்யப்பட்ட அரசியல் யாப்பிற்கு மக்கள் ஆதரவு இருக் கும் போதே அதனை மாற்றி அமைக் கப்பட்ட அரசியல் யாப்பாக கொள்ள முடியும் என்பது ஒரு பொதுவான கருத்தாகும்.

ஆனால் இலங்கையிலுள்ள பாராளுமன்ற முறைமையின் படி ஆட்சி அமைக்கும் அரசிற்கு மூன் றில் இரண்டு பெரும்பான்மை கிடைப்பது அரிது. அதிலும் அரசி யல் யாப்பினை மாற்றுதல் என்ற விடயத்தில் அங்கிருக்கும் பிரதி நிதிகளின் ஆதரவு கிடைக்காது என்பது தெரிந்ததே.

எனவே பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவுடன் அர சியல் யாப்பினை மாற்றியமைத்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண் பது சாத்தியப்படாத ஓர் விடயம்.

### மாற்று வழி

ஆனால் இதற்கு ஓர் மாற்று வழி உள்ளது. அதாவது நாம் ஆட்சிக்கு வந்தவுடன் அரசியல் நிர்ணய சபையை உருவாக்கி அச் சபையின் மூலம் அரசியல் யாப் பினை மாற்றி அமைக்கப் போகி றோம் என்ற கொள்கையை பிரக டனப்படுத்தி தேர்தலில் போட்டி யிடும் கட்சி ஒன்று மக்களின் அதிக பட்ச ஆதரவைப் பெற்று அர சமைக்குமானால் பாராளுமன்றப் பெரும்பான்மையோ சர்வஜன வாக்கெடுப்போ இன்றி சாதாரண பாராளுமன்ற ஆதரவுடன் அரசி யல் யாப்பினை மாற்றி அமைத்து விட முடியும். இதுவே தற்பொழு துள்ள இலங்கையின் பாராளு மன்ற முறைமைக்குச் சாதகமான தொரு வழியாகும்.

இந்த வழி பல தடவைகள் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியினரா கிய எம்மால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு கூறப்பட்டுள் ளது. இதனை அவர் தற்பொழுது உணர்ந்து கொண்டுள்ளார்.

எனவே, அரசியல் யாப்பினை மாற்றியமைப்பது ஒன்றே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஒரே வழி என்றார்.

### இடைக்கால நிர்வாக சபை

விடுதலைப்புலிகளால் கோரப் பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபை பற்றிக்கருத்துத் தெரிவித்த போது,

தமிழர்களுக்குள்ள உடனடிப் பிரச்சினைகளையும் தேவைகளை யும் பூர்த்தி செய்ய இடைக்கால நிர்வாக சபை ஒன்று அவசியம் என நாம் வலியுறுத்தி வந்தோம். ஆனால் இன்று கூட்டமைப்பினர் என கூறப்படும் கட்சிக் காரர்கள் இத னைக் கடுமையாக எதிர்த்தார்கள். இதனால் அன்று எமது கைகளில் கிடைக்கவிருந்த நிர்வாகசபைக் கட்டமைப்புக்கிடைக்காமல் போய் விட்டது. ஆனால் அதே இடைக் கால நிர்வக சபையை அவர்களே இன்று கோருகின்றனர். இந்த இடைக் கால நிர்வாக சபை மக்களின் நீண்ட காலப் பிரச்சினைகளுக் குத் தீர்வை ஏற்படுத்தாது. எனவே இடைக்கால நிர்வாகசபைக் கோரிக்கைகளைக் கைவிட்டு அர சியல் யாப்பினைத் திருத்தி அமைத்து அதன் மூலம் தமிழ் மக்களின் பிரச் சினைக்குத் தீர்வுகாண முற்பட வேண்டும்.


### பொதுத்தேர்தல்

அத்துடன் எதிர்வரும் நாடாளு மன்றத் தேர்தலில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பிர தேசத்துள் வாக்கெடுப்புக்களை நடத்துவது பற்றி கருத்துத் தெரி வித்தபோது,

விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டு பிரதேச மக்கள் வாக்களிக்க வேண்டும் என்பது முக்கியமான தொரு விடயமாகும் .ஆனால் அவர் களின் கட்டுப்பாட்டுப் பிரதேசத் துள் வாக்குச்சாவடிகளை அமைப் பதில் பல சிக்கல்கள் உண்டு.

வாக்கெடுப்பினை நீதியாகவும் நியாயமாகவும் நடத்துவதற்கு வாக்குச் சாவடிகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படல் வேண் டும். அவ்வாறு இல்லா விட்டால் அப்பகுதியில் இடம் பெறும் வாக் கெடுப்பின் நம்பகத் தன்மை பாதிக் கப்படும்.

இதைவிட சட்ட ரீதியாக ஒவ் வொரு வாக்குச்சாவடிகளிலும் அவ்வவ் மாவட்டங்களில் போட்டி யிடும் சகல கட்சிகளது முகவர் களும் தேர்தல் கண்காணிப்பாளர் களும் அவசியம். ஆனால் புலி களின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுள் சென்று கண்காணிப்புக்களில் ஈடுபடுவது என்பது சாத்தியப் படாது என்றார். (தி-60,64,4)



யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற மகளிர் அபி விருத்தி நிலையத்தின் மகளிர் தின நிகழ்வின் போது வெளியிடப பட்ட கைநூலின் பிரதியொன்றை மல்லாகம் நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவனிடமிருந்து சட்டத்தரணி பவானி சற்குணராஜா பெற்றுக்கொள்வதைப்படத்தில் காணலாம்.

## வேலணை மக்கள்கோரிக்கை

(வேலணை)

மாலை நேரம் மட்டும் வழங் கப்பட்டுவரும் வேலணைப் பகு திக்கான குழாய் மூலமான குடிநீர் விநியோகத்தினை மீண்டும் காலை வேளைகளிலும் பெறுவதற் கேற்ற வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு தேசிய நீர் வழங்கல் வடி கால் அமைப்பு சபையிடம் வேல ணைப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வேலணையில் இடம் பெற்ற இடப் பெயர்வுக்கு முன்னர் தின மும் காலையிலும் இருவேளை யாக இப்பகுதி மக்களுக்கு குடி நர் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது மக்கள் அதிகளவில் குடியேறியுள்ள போதிலும் ஒரு தடவை மட்டுமே நீர் வழஙகப்பட்டு வருகிறது. இதனால் இக் குடிநீர் சேவையை அதிகரிக்குமாறு மக் கள் கோரியுள்ளனர். (தி-47)

## விஞ்ஞான சங்கத்தின் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் யாழ்.மாவட்டப் பாட சாலைகளுக்கிடையே யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடத் திய விஞ்ஞானக் கண்காட்சிப் போட்டியில் முதல் 9 இடங் களையும் பெற்ற பாடசாலை களும் அவை காட்சிப்படுத்திய தலைப்புகளின் விபரங்களும் பின் வருமாறு:

1ம் இடம்: யாழ் இந்துக்கல் லூரி (யாழ்.குடாநாட்டின் நீர்முகா மைத்துவம்)

2ஆம் இடம்: உடுப்பிட்டி அமெ ரிக்கன் மிஷன் கல்லூரி (திரை யிடல் கருவி)

3ஆம்இடம்: காரைநகர் யாழ்ரன் கல்லூரி (யாழ்.மாவட்டத்தில் பொலித்தன், பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனை முறை கள்)

4 ஆம் இடம்: சுழிபுரம் விக் ரோறியாக் கல்லூரி (டெங்கு நோய்க் காவிகளை தவிர்க்கும் முறைகள்)

5ஆம் இடம்: சென் பற்றிக்ஸ் கல்லூரி (பயன் தரும் பூச்சி கொல்லிகள்,தானியங்கி கைய டக்கத் தொலைபேசி)

யாழ். மத்திய கல்லூரி (கழிவு களால் கழிவுகளைத் தடுப் போம், நகரைப் பேணுவோம், மண்ணரிப்பைத் தடுப்போம்)

5ஆம் இடம் 3 தலைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

8 ஆம் இடம்: யாழ். சென் பற் றிக்ஸ் கல்லூரி (திரையிடல் கருவி)

9 ஆம் இடம்: உடுப்பிட்டி அமெ ரிக்கன் மிஷன் கல்லூரி (கற்பூரம் எரித்துக் கதவுதிறத்தல்) (தி-61)

## கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு கருணா கட்டுப்பாடு விதிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்து சென்றுள்ள கருணா " கிழக்குப் பிராந்தியத்தில் தேர்தலில் போட் டியிடும் தமிழ்த் தேசிய கூட்ட மைப்பு வேட்பாளர்கள் தங்கள் தேர்தல் பிரசாரங்களை குறிப்பிட்ட வரையறைக்குள் வைத்துக் கொள்ளவேண்டும் என்று கருணா கட்டுப்பாடு வித்துள்ளார்.

ஈழப்போரட்டம் , விடுதலைப் புலிகள் மத்தியில் ஏற்பட் டுள்ள பிளவு நிலை குறித்து தேர்தல் பிரசாரத்தின் போது எதுவித அபிப் பிராயமும் வெளியிடக் கூடாது என்றார்.

இது பற்றி மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பி னர் அரியநாயகம் சந்திரநேரு கருத்துத் தெரிவிக்கையில்,

கிழக்கு பிராந்தியத்தில் தேர் தலில் போட்டியிடவுள்ள வேட் பாளர்கள் வேறு எந்த விடயங் களிலும் தலையிடாமல் தேர்தல் பிரசாரத்தில் மட்டும் ஈடுபட வேண்டும் என கருணாவின் பிரதி நிகிகள் நேரமு (மன்கினம் எம் மைச் சந்தித்தபோது கூறியிருந் தார்கள்.



எனவே நாங்கள் தமிழீழ விடு தலைப்புலிகள் இயக்கத்தின் பிளவு நிலை குறித்து எமது கருத்துக்கள் எதையும் தேர்த்ல் பிரசாரக் கூட்டங்களின் போது கூற மாட்டோம்.

ஆனால் "தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழர்கள்" "தமிழர் களே தமிழீழ விடுதலைப்புலி கள்" என்ற கோசத்தை வைத்து தான் எங்கள் வாக்குகளைச் சேகரிக் கவுள்ளோம்.

இதனை கருணாவோ அன்றி அவாகளின் பிரதிநிதிகளோ தடுக்க முடியாது என்றார்.

(கி-61.10)

## போராட்டங்களைக் கட்டுப்படுத்த பிரதமர் தவறிவிட்டார்

### மகிந்த ராஜபக்ஷ சாடல்

(கொழும்பு)

வேலைநிறுத்தப் போராட் டத்தில் ஈடுபட்டுள்ள வைத்தியர் களின் பிரச்சினைகளைத் தீர்ப் பதற்குரிய நடவடிக்கைகளை எடுப் பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் எதுவித முயற்சிக ளையும் எடுக்கவில்லையென முன் னாள் எதிர்ககட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

நுகேகொடவில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் உரையாற்று கையிலேயே மகிந்த ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத் துத்தெரிவிக்கையில்,

அண்மைக்காலமாகப் பொருட் களின் விலைகளும், ரயில் கட்ட ணங்களும் மாற்றம் செய்யப்பட்டு அதிகரிக்கப்பட்டுள்ளன. இவற்றி னால் நாட்டு மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங கத்தின் நிர்வாகத்தில் தற்போது பெரும்சிக்கல்களும் குழப்பங் களும் ஏற்பட்டுள்ளன. இதனால் தொடர்ச்சியாக வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வைத் தியர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கு அரசு கவன மெடுக்கவில்லை.

நாடு எதிர்நோக்கியுள்ள இத் தகைய பல்வேறு பிரச்சினை களுக்குத் தீர்வு காண ஐக்கியமக் கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்ததும் நடவடிக்கை எடுக்கும்.

நாட்டில் சமாதானத்தை நிலை நாட்டுதல், இளைஞர்கள் யுவதி கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச் சினைகளுக்கும் தீர்வுகாணல், கனிஷ்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு புரதப் பால் வழங்குதல், நாட்டின் அபி விருத்தித்திட்டங்களை வெற்றி கரமாக முன்னெடுத்துச் செல்லல் உளளூக் கைத்தொழிலாளர்கள் விவசாயிகள் ஆகியோருக்கு ஊக் குவிப்பு வழங்கி உதவிகள் செய் தல் போன்ற பல திட்டங்களை ஐக் கிய மக்கள் சுதந்திர முன் னணி ஆட்சிக்கு வந்ததும் அமுல் படுத்தும் என்றும் தெரிவித்தார்.(தி-60,61,18,10)

உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடனுறைந் தற்று - குறள்

# வலம்புரி

## அதிர்ச்சிதரும் தகவல்கள்

விடுதலைப் புலிகளின் தலைமையோடு முரண்பட்டு பிரிந்துநிற்கும் மட்டு-அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதியாக இருந்த கேணல் கருணாவுக்குப் பின்னணியாக அமெரிக்காவின் சதித்திட்டம் இருப்பதாக விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கரிகாலன் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் சமகால அரசியல் நிலைப்பாடு குறித்து உரையாற்றிபோதே மேற்போந்த செய்தியை கரிகாலன் தெரிவித்தார்.

கரிகாலனின் அறிவிப்பு தனிப்பட்டதோர் அறிவிப்பன்று. அது விடுதலைப் புலிகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற அறிவிப்பாகும். பிரதேசவாதத்தை முன்வைத்து விடுதலைப் புலிகளின் தலைமையுடன் முரண்பட்டுக்கொண்ட கருணாவை விடுதலைப் புலிகளின் தலைமை, தமது அமைப்பிலிருந்து விலக்கியது.

இவ்வாறு கருணாவை விலக்க அவரின் இடத்திற்குத் தளபதியாக ரமேஷை நியமித்திருந்தது. புதிய தளபதியாகப் பதவியேற்ற ரமேஷ் மட்டக்களப்பைச் சேர்ந்தவர். அவர் கருணாவுக்கு அடுத்தபடியாக தளபதி ஸ்தானத்தில் இருந்தவர். அவர் பதவியேற்ற கையோடு ஊடகங்களுக்கு வழங்கிய பேட்டியில் கருணாவின் இத்தகைய செயற்பாட்டுக்கு வெளிநாடு ஒன்றின் பின்னணி இருப்பதை ஏற்றுக்கொண்டார். எனினும், அதனைத் தாம் தற்போது வெளிப்படுத்த விரும்பவில்லை எனக் கூறியிருந்தார்.

இந்நிலையில், இப்போது புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கரிகாலன் கருணாவின் செயற்பாட்டிற்குப் பின்னணியில் அமெரிக்கா இருப்பதைப் பகிரங்கப்படுத்தியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் ஒவ்வொரு அசைவிலும் கண்ணும் கருத்துமாக அமெரிக்கா இருப்பதை அந்நாட்டின் கடந்தகால நடவடிக்கைகள் உறுதி செய்வதாக உள்ளன. குறிப்பாக, விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத அமைப்பாகக் குறித்து அவ் அமைப்பைத் தனது நாட்டில் தடைசெய்ததோடு, டோக்கியோ மாநாட்டில் புலிகள் கலந்துகொள்வதையும் தடைசெய்திருந்தது.

இலங்கைக்கு உதவும் டோக்கியோ மாநாட்டில் விடுதலைப் புலிகள் கலந்துகொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்குமாயின், சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டுப்போகவேண்டிய தேவை இருந்திருக்கமாட்டாது.

அவ்வகையில் நோக்கும்போது, சமாதானப் பேச்சுக்கள் தடைப்படுவதற்கான காரணங்களில் அமெரிக்காவே முதலிடம் வகிக்கின்றதென அனுமானித்துக்கொள்ளமுடியும்.

விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளைக் கண்டித்து-விமர்சித்து அறிக்கைகளை விடும் அமெரிக்கா சமாதானப் பேச்சுக்களைத் தொடர்வதற்கு அரசும், ஜனாதிபதியும் தடையாக இருந்தபோது அதுபற்றி எதுவித கருத்துக்களையும் கூற மறுத்துவிட்டமை, அந்நாட்டின்மீதான சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துவதாக உள்ளது.

இதேவேளை, மட்டக்களப்பில் ஐக்கியதேசியக் கட்சி வேட்பாளர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் குறித்து உடனடியாகவே கண்டன அறிக்கை விடுத்த நாடு அமெரிக்கா என்பதும் இங்கு நினைவிற் கொள்ளத்தக்கது.

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம், அதனால் ஏற்படக் கூடிய மரணங்கள் குறித்த கண்டனங்கள் எவ்வகையிலும் கண்டனத்துக்குரியவையல்ல. இது ஜனநாயகத்திற்கான பாங்கு. ஆனால், மட்டக்களப்புச் சம்பவத்திற்குக் கண்டன அறிக்கை விடுவதில் அமெரிக்கா காட்டிய அவசரமும் - அக்கறையும் அதனைத் தொடர்ந்து கருணாவின் முரண்பாடும், கரிகாலன் கூறிய கருத்துக்களோடு ஒத்திசைவதை உணரமுடிகின்றது.

இவை ஒருபுறம் இருக்க, மறுபுறத்தில் புலிகளின் தலைமையுடன் முரண்படுவதற்கு முன்னதாகவே கருணா ஜனாதிபதி சந்திரிகாவுடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தார் என ஆங்கிலவார ஏடொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கரிகாலன் வெளியிட்ட தகவலும், ஆங்கில வார இதழ் தெரிவித்த செய்தியும் மக்களுக்கு அதிர்ச்சி தருவதாக உள்ளது.

விடுதலை நோக்கிய போராட்டத்தில் இத்தகைய ஊடுருவல் பாதகமான விளைவுகளை ஏற்படுத்திவிடுமோ என்ற அச்சமும் மக்களிடமும் ஏற்படவே செய்துள்ளது.

# கூட்டமைப்பின் வேட்பாளர்களுடன் கருணாவின் பிரதிநிதிகள் சந்திப்பு

(நமது நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட முன்னாள் சிறப்புத் தளபதி கேணல் கருணாவின் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றதாக அம்பாறை மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் அரியநாயகம் சந்திரநேரு தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சந்திப்பில், விடுதலைப் புலிகளின் தலைமைக்கும் கருணாவுக்குமிடையிலான பிரச்சினைகள் தொடர்பாக கருத்துக்கள் எதுவும் கூறாமல் தேர்தல் பிரசாரத்தை மேற்கொண்டு வீட்டுக்குப் புள்ளடி போடுமாறு கேட்டுக்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப புலிகளின் தலைமைக்கும் கருணாவுக்குமிடையில் பிரச்சினைகள் இருந்தாலும், தமிழீழ விடுதலைப் புலிகள தான் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்ற கோஷத்தை முன்வைத்தே நாம் இப்போதும் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறோம்.

அவர்களது கருத்து முரண்பாடுகள எதனையும் நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை. அந்த விடயம் அவர்களுடையது. அது அவர்களினால் தீர்த்துவைக்கப்பட வேண்டியதாகும்.

அம்பாறை மாவட்டத்தின் வேட்பாளர்களாக தாம் தெரிவு செய்யப்பட்டபோது இப்பகுதி மக்களே எம்மைத தெரிவு செய்தார்கள். அவர்கள்தான் எமக்கு அப்போது அறிவுரை வழங்கினார்கள். இப்போதும் வழங்குகிறார்கள். இதில் எந்தவிதமான கருத்து முரண்பாடுகளும் இல்லை. வடக்கு வேட்பாளர்கள் கிழக்கிலும், கிழக்கு வேட்பாளர்கள் வடக்கிலும் பிரசாரம் செய்வதில் எமக்கு எந்தத தடையும் இல்லை. ஆனால், அதற்கு எமக்கு நேரம் கிடைககுமோ என்பது தெரியாது என்றும் சந்திரநேரு மேலும் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் அம்பாறை மாவட்ட வேட்பாளர்கள் சார்பில் விவேகானந்தன், பத்மநாதன் ஆகிய இருவரையும் தவிர எட்டு வேட்பாளர்களும் கருணாவின் சார்பில் விசு, றொபேர்ட் துரை, பாவா ஆகியோரும் கலந்துகொண்டார்கள். (ம)

# சுதந்திரமான தேர்தலை நடத்த அனைவரும் முன்வரவேண்டும்

## ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி அழைப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலை நீதியாகவும் சுதந்திரமானதாகவும் நடத்துவதற்கு இலங்கைப் பிரஜைகள் யாவரும் முன்வந்து செயற்படுவார்கள் ஆயின் அதன் நன்மைகளை அவர்களே அனுபவிப்பார்கள் என ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஜோன் குஸ்நகன் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றிற்கு அளித்த விசேட பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள தேர்தல் பற்றி தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

இலங்கையில் இதுவரை நடைபெற்று வந்த தேர்தல்கள் பற்றி நான் நன்கு அறிந்துள்ளேன்.

இலங்கையின் தேர்தல் முறைகள் பற்றி வேட்பாளர்களும் வாக்காளர்களும் நன்கு அறிந்திருந்தாலும் தேர்தல் சுதந்திரமாகவும் நீதியாகவும் நடைபெறுவதற்கு ஏற்ற வகையில் நடக்கவேண்டும்.

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் தொடர்பான எனது யோசனைகளை வாக்காளர்களும் வேட்பாளர்களும் ஏற்றுக்கொண்டு நடப்பார்களாயின் அதன் நன்மைகளை அவர்களே அனுபவிப்பார்கள் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். (தி-61,10)

## பல்கலைக்கழக ஊழியர்கள் இன்று ஒருநாள் வேலைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் இன்று புதன்கிழமை ஒருநாள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளது.

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆயிரத்து 250 ரூபா சம்பள உயர்வினைப் பல்கலைக்கழக ஊழியர்களுக்கு வழங்க வேண்டுமெனவும், சம்பளத் திட்டத்தில் காணப்படும் முரண்பாட்டினை நீக்கும் வகையில் வழங்கப்பட்டுவரும் ஆயிரத்து 150 ரூபாவினை தொடர்ந்து வழங்க வேண்டும் எனவும் கோரியே பல்கலை ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இவ் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் 18 தொழிற்சங்கங்களை உள்ளடக்கிய அனைத்துப் பல்கலைக்கழக தொழிற் சங்க சம்மேளனம் மற்றும் 6 தொழிற் சங்கங்களை இணைத்து உருவாக்கிய கூட்டுக்குழுவினரும் ஈடுபடவுள்ளனர். (தி-19)

## அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

அராலி தெற்கு, வட்டுக்கோட்டை என்ற விலாசத்தையுடைய முருகேசு குலசேகரம் என்பவரது தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரிமையாளர் வலம்புரிப் பத்திரிகை அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்தவாகள், அறியாமை மிக்கவர்கள், ஏழைகள், கல்வியறிவற்றவர்கள், சக்கிலியர், தோட்டிகள் அனைவரும் உன்னுடன் இரத்தத் தொடர்புடைய நெருககமான உறவினர்களே. உன் உடன்பிறந்த சகோதரர்களே என்பதை நீ மறந்துவிடாதே.

சுவாமி விவேகானந்தர்.

# கம்பஹா மாவட்ட வேட்பாளர் விலகல்

(கொழும்பு)

கம்பஹா மாவட்டத்தில் ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் சார்பில் போட்டியிடும் சங்கைக்குரிய அபரச பத்தானந்த தேரர் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து விலகியுள்ளார்.

அவர் தனது இத் தீர்மானம் குறித்து கம்பஹா தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிக்கும், ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் உடுவே தம்மாலக்க தேரருக்கும் அறிவித்துள்ளார்.

தேர்தலில் பௌத்த பிக்குகள் போட்டியிடுவதற்கு மகாநாயக்க தேரர் மற்றும் மகா சங்கத்தைச் சேர்ந்த 90 சதவீதமான தேரர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததாலேயே, தான் இத்தகைய முடிவை எடுத்திருப்பதாகத் தெரிவித்த பத்தானந்த தேரர்,

ஜாதிக ஹெல உறுமயவிற்குச் சார்பாக தான் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டமை மகாசஙகத்தினருக்குப் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியிருந்ததாகவும் சுட்டிக்காட்டினார். (தி-60,10)

## தவக்கால சிந்தனை-22

உலகத்திலே சிறந்த நாடு எது? நாட்டிலே சிறந்த குடிமகன் யார்? முதல்தர நாடு! மூன்றாம்தர நாடு! பொருள் என்ன? பொருளாதாரத்தையே மையமாக வைத்து பிரிக்கப்படுகிறது. அடாவடித்தனம் செய்து பிற நாடுகளை சுரண்டிப் பிழைக்கும் நாடுகளே முதல்தர நாடுகளாக கணிக்கப்படுகின்றன. முதல்தர குடிமகன் நாட்டுப்பற்று மிக்கவன். நாட்டின் சட்டங்களைத் தெரிந்து மதித்து நடப்பவன். முதல்தர நாடுகளின் கடமை பிற நாடுகளை, அவைகளின் கொள்கைகளை மதித்து வாழ வழி செய்வதேயாகும். கொள்கைகளை மதித்து, சட்டங்களை மீறுகிற நாடோ, தனிநபரோ தரமிழந்தவர்கள். கானான் தேசம் கடவுளின் கொடை இஸ்ரயேலர் கடவுளின் நியமஙகளைக் கடைப்பிடித்து ஒழுகினால் இப்பேரினம் ஞானமும், அறிவாற்றலும் கொண்டது என பல நாடுகள் மத்தியில் பெருமை பெறும் (இச - 4:6). கடவுளின் நியமங்கள் வாழ்வளிப்பவை. அவை என்றும் அழியாத் தன்மை கொண்டவை. யாரும் அழிக்கவும் முடியாது. நம்மை நாமே சிறப்பாக்கிக் கொள்ள, நம்மைச் சுற்றியுள்ளோரை சிறப்பாக்க நியமங்களைக் கடைப்பிடிப்போம்.

காவலன்

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட் களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
யாழ்.: 021 222 3916, 0777 801038
கொழும்பு: T.P.: 2390128, Fax: 2399650, Mob: 0777 517019

# 10 ஆயிரம் ஆசிரியர்கள் இன்று சத்தியாக்கிரகம்

(கொழும்பு)

சம்பள முரண்பாடு உட்பட முக்கியமான சில கோரிக்கைகளை முன் வைத்து சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இன்று புதன் கிழமை கொழும்பு விகாரமாதேவி பூங்காவல் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

ஆசிரியர்கள் எதிர்நோக்கிவரும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் குறித்து அரசாங்கம் இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்றும், அரசாங்கத்தின் இவ்வாறான நிலைப்பாடுகளுக்கு எதிர்புத் தெரிவிக்கும் முகமாகவே இன்று ஆசிரியர்கள் சத்தியக்கிரகப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கல்விசார் ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் பி.சி.பெரேரா சம்பள முரண்பாட்டைத் தீர்த்தல், முதலாம் தர ஆசிரியர் பதவிஉயர்வு பெறத் தகுதியானவர்களுக்கு வயதுக் கட்டுப்பாடின்றி வாய்ப்பு வழங்குதல், தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குதல் மற்றும் ஆசிரியர் சேவை நிலையியல் குழுவின் முடிவுகளை அமுல்படுத்துதல் ஆகிய முக்கிய கோரிக்கைகளை முன்வைத்தே ஆசிரியர்கள் இப்போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். (தி-18)

# பாகிஸ்தான் அணியிடம் இந்திய அணி தோல்வி

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் பாகிஸ்தான் அணி 12 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 329 ஓட்டங்களைப் பெற்றது. இதில் யசீர் ஹமீட், அவ்விரிடி ஆகியோர் முறையே 86, 80 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 48.4 ஓவர்கள் முடிவில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 317 ஓட்டங்களைப் பெற்றது. இதல் சச்சின் டெண்டுல்கார் 141 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் அக்டர் முஹமட் சுமித் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (ச)

## தேவார இசைமணிக்கு இன்று பட்டமளிப்பு

(கொழும்பு)

தேவார இசைமணி தாவடியூர் கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தனுக்கு திருவாவடுதுறை ஆதீனம் இன்று பட்டமளித்துக் கௌரவிக்கவுள்ளது.

திருவாவடுதுறை ஆதீன சுவாமிகள் சீர்வளர்சீர் சிவப்பிரகாச நமசிவாய சுவாமிகள் தேவார இசைமணிக்கு பட்டமளித்துப் பொனனாடைபோர்த்தி, பொற்கிழியும் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.(ந)

## எஸ்.பிக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

எஸ்.பி.திஸநாயக்கவுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்வதற்கு சட்டமா அதிபர் தீர்மானம் எடுத்துள்ளார். உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவிறகே அவர் இத் தீர்மானத்தை எடுத்துள்ளார். (ச)

## தாய்...

ளதாக கணவரான கியூபேட் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த 3ஆம் திகதி மன்னாருக்குச் செல்வதாகக் கூறிவிட்டுச் சென்ற அவர்கள் அங்கு செல்லவில்லை எனவும், நேற்றுவரை வீடுதிரும்பவில்லை எனவும் அம்முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-19)

## வாக்களிப்பு...

மேற்படி சந்திப்பு இடம்பெறவுள்ளது.

நேற்ற முன்தினம் நடைபெற்ற மேற்படி சந்திப்பின்போது, சூனியப்பிரதேசங்களில் மிதிவெடி அபாயம் உள்ளமையினால் அங்கு வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதில் சிரமங்கள் உள்ளன என்றும், இராணுவக் காவலரணகளுக்கு அண்மையில் இவ் வாக்களிப்பு நிலையஙகளை அமைப்பதன்மூலமே சுமுகமாக தேர்தலை நடத்த முடியும எனவும்இராணுவ உயரதிகாரிகள்சுட்டிககாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(தி-18)

## மட்டு-அம்பாறை...

தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்ள வேண்டும் எனவும், கிடைக்கக்கூடிய ஆசனங்களைக் கொண்டு எக்கட்சி ஆட்சியமைத்தாலும் அக்கட்சியுடன இணைந்து அமைச்சுப்பதவிகளையும் பெற்று பின்தங்கிய நிலையில் உள்ள கிழக்கை அபிவிருத்தி செய்யவேண்டும் என்ற கருத்து கருணா அணியினரிடம் மேலோங்கியிருப்பதாகவும் இதற்கு கருணாவுடன் நெருக்கமான மட்டக்களப்பு- அம்பாறை மாவட்ட வேட்பாளர்கள் சிலர் சம்மதம் தெரிவித்திருப்பதாகவும் செய்திகள் தெரிவித்திருக்கின்றன.

இது இவ்வாறிருக்க கருணா மீது வன்னித் தலைமை எடுத்துள்ள தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்யக்கோரி கடந்த 5 நாட்களாக மட்டக்களப்பு அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரப் பிள்ளையார் ஆலய முன்றலில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கதாகும். (ம)

# அரசாங்க அறிவித்தல்

பாராளுமன்றத் தேர்தல்கள் – 2004.04.02

சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டத் திகதிகளில் மாற்றம்

| முன்னர் அறிவிக்கப்பட்ட திகதி | தற்போது மாற்றப்பட்ட திகதி |
|---|---|
| 18.03.2004<br>19.03.2004 | 22.03.2004<br>23.03.2004 |

இதற்கமைய உரிய மாற்றப்பட்ட திகதிகளில் முன்னர் அறிவிக்கப்பட்ட நேரத்தில் தவறாது பங்குகொள்ளுமாறு அறிவித்துக்கொள்கின்றேன்.

தெரிவத்தாட்சி அலுவலர்.
தேர்தல் மாவட்டம்
இல.10 - யாழ்ப்பாணம்.

(சி-7440)

# மரணஅறிவித்தல்

## கந்தையா தனபாலசிங்கம்

(மின்மாணி வாசிப்பாளர், இலங்கை மின்சாரசபை, யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம், கந்தர்மடம், இல: 14/1, புகையிரத வீதியைச் சேர்ந்த கந்தையா தனபாலசிங்கம் அவர்கள் நேற்று (16.03.2004) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் சிவபதமடைந்தார்.

அன்னார் கந்தையா – இலட்சுமியின் அன்பு மகனும், இந்திராவின் அன்புக் கணவரும், ஜெயரஞ்சினி (பிரான்ஸ்), சுஜீவன், சுஜேந்திரன் (சமுர்த்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்), சுதாகரன் (கொழும்பு), ஜெயசீலி (இலண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், லோகதாஸ் (பிரான்ஸ்), றஜனி, செல்வமலர், ஜெனோதாஸ் (இலண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கிஷோர், சஜிதா, பவித்திரன் ஆகியோரின் பாசமிகு பேரனும், குணபாலசிங்கம், செல்வராசா, பத்மநாதன், காலஞ்சென்ற தவமணி, நேசமலர், தேவிகா, இராசமலர், மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல: 14/1, புகையிரத வீதி,
கந்தர்மடம்.

தகவல்:
குடும்பத்தினர்


# பதவி வெற்றிடம்

**கணனி பக்க அமைப்பாளர்கள்**

*அனுபவம் உள்ள ஆண் பெண் இருபாலாரும்.*

**விளம்பர முகவர்**

*நிறுவனத்தில் இணைந்து வெளிக்களத்தில் பணியாற்றுதல்*

*வயது 25 முதல் 50 வரை*

**தகுதியானவர்கள் சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் 18.03.2004 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு நேரில் வரவும்.**

வலம்புரி.
15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.

நிர்வாக
உத்தியோகத்தர்



# யாழ். மண்ணில் முதன் முறையாக வட்டுக்கோட்டையில்

புனிதபத்திரிசியார் கல்லூரி



மூன்றாவது மத்தியஸ்தம் கொண்ட மாபெரும் துடுப்பெடுத்தாட்டம். ராஜன் கதிர்காமர் வெற்றிக்கேடயத்திற்கான வடக்கின் பொன் அணிகள் மோதல். மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள்



யாழ்ப்பாணக் கல்லூரி

## மோதவிருக்கும் அணிகள்

யாழ்ப்பாணக்கல்லூரி எதிர் புனித பத்திரிசியார் கல்லூரி

இடம்:- யாழ்ப்பாணக் கல்லூரி பிக்னல் மைதானம்

காலம்:- 18.03.2004 (வியாழக்கிழமை) காலை 9.00 மணி தொடக்கம்

இம்மாபெரும் துடுப்பாட்ட நிகழ்வு தொலைக்காட்சி மூலம் யாழ். மக்களுக்கு காண்பிக்கப்படவுள்ளது.

(சி-7441)

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள்:- 077 6143541, 021-222-5680


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.03.2004